...ந்துறைப் படிப்பகம்
...நகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து




சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 30 சனிக்கிழமை (12.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 115

# இலங்கை - சீனா - பாக். இணைந்து
# இந்தியாவுக்கு எதிராகக் கூட்டணி

## ஜே.வி.பி. எம்.பி தடுத்து வைப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியிலிருந்து பிளவுபட்ட விமல் வீரவன்ச தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களின் 2 வாகனங்களை தாமே கடத்தியதாக ஒப்புக்கொண்டிருக்கும் திருகோணமலை மாவட்ட ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகரவை எதிர் வரும் 17ஆம் திகதி (10 ஆம் பக்கம் பார்க்க)

## சீனா தலைமையில் ஆலோசனை

(இஸ்லாமபாத்)

இந்தியாவுக்கு எதிரான பாரிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு சீனா - இலங்கை - பாகிஸ்தான் என்பன இணைந்து முயற்சித்து வருகின்றன. இந்தக் கூட்டணியில் இலங்கையும் பாகிஸ்தானும் இணைந்தமையால் இந்தியா கடும் சீற்றம் அடைந்துள்ளதாகப் பாகிஸ்தான் நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விமானப் படையின் முன்னாள் தளபதி மரணம்

(கொழும்பு)

இலங்கை விமானப் படையின் முன்னாள் தளபதி எயார் சீப் மார்சல் ஹரிகுணதிலக்க காலமானார்.

1976ஆம் ஆண்டு தொடக்கம் 1981ஆம் ஆண்டு வரை இலங்கை விமானப் படையின் தளபதியாக இருந்த ஹரிகுணதிலக்க தற்போதைய விமானப்படைத் தளபதி றொசான் குணதிலக்கவின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனைகளை பின்பற்றுமாறு முக்கியஸ்தர்களுக்கு அறிவுரை

(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் அரசாங்கத் தரப்பைச் நேர்ந்த முக்கியஸ்தர்கள் தங்களது பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்புத் தரப்பினரால் வழங்கப்படுகின்ற பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைகளை அவ்வாறே கடைப்பிடிக்குமாறும் அறிவுரை வழங்கியுள்ளார்.

நாட்டில் எந்தப் பகுதியாகவிருந்தாலும் பிரசித்தமாக நடத்தப்படுகின்ற நிகழ்வுகளில் பங்குபற்றும்போது பாதுகாப்புத் தரப்பினரால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளை அலட்சியம் செய்ய வேண்டாம் என்றும் முடிந்தளவு அந்த ஆலோசனைகளைப் பின்பற்றுமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

சிங்கள -தமிழ்ப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் சேவை

யாழ்.மாவட்டத்திலிருந்து பிரமாவட்டத்திற்குப் பிரயாணம் மேற்கொள்வதற்கான கப்பல் சேவை நேற்று நடைபெறவில்லை. அச்சேவை இன்று நடைபெறும் எனத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் பிரயாணம் மேற்கொள்வதற்கு பிரயாண அனுமதிப் பத்திரம் (Token) பெற்றவர்கள் பிரயாண ஏற்பாடுகளுடன் இன்று காலை யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ச)

## கைதடியிலும் நீர்வேலியிலும் இருவர் நேற்றுச் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கைதடியிலும் நீர்வேலியிலும் இடம்பெற்ற வெவ்வேறு இரு சூட்டுச் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் இனந்தெரியாத ஆயுதக்குழுவினால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கைதடியில் நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் கைதடி மேற்கைச் சேர்ந்த மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையான பண்டாரி பரமநாதன் (வயது 34) என்ற சலவைத் தொழிலாளியே கொல்லப்பட்டதாக (10 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுறுத்தலையடுத்து வீரவன்ச தலைமறைவு!

(கொழும்பு)

ஜே.வி.பி. கட்சியின் அதிருப்திக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச தலைமறைவாகி விட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகவும் பிரசார செயலாளராகவும் இருந்த விமல் வீரவன்சவை இடைநீக்கம் செய்ய அக் கட்சி முடிபு செய்துள்ளது.

இதனையடுத்து ஜே.வி.பியின் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவன்சவுக்கு ஆதரவு (10 ஆம் பக்கம் பார்க்க)

## 30 ஆயிரம் ஏவுகணைகளைப் பெறுவதற்கு ஸ்லோவோக்கியாவுடன் மற்றொரு ஒப்பந்தம்

(கொழும்பு)

பல்குழல் பீரங்கிகளுக்குப் பயன்படுத்தும் 122 மில்லி மீற்றர் ரகத்திலான 10 ஆயிரம் ஏவுகணைகளை இலங்கைக்கு விற்பனை செய்துள்ளதாக ஸ்லோவோக்கிய பொருளாதார அமைச்சு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த ஆயுத விற்பனையானது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆயுத ஏற்றுமதி தொடர்பான விதிமுறைகளுக்கு முரணானது அல்ல என ஸ்லோவோக்கிய வெளிவிவகார அமைச்சுச் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் உள்நாட்டு மோதல்கள் இடம்பெறும் நாடுகள், பொதுமக்கள் பாதிக்கப்படும் நிலைமை காணப்படும் நாடுகள் போன்றவற்றுக்கு ஆயுத ஏற்றுமதி செய்யக் கூடாது என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிமுறையை ஸ்லோவோக்கியா மீறியுள்ளதாக சர்வதேச நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, ஸ்லோவோக்கி (10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப் படையினர் மீது கிளைமோர்த் தாக்குதல்

(அம்பாறை)

அம்பாறை புளுகுநாவைச் சந்திக்கும் தாந்தாமலைச் சந்திக்கும் இடையில் சிறப்பு அதிரடிப் படையினர் சென்று கொண்டிருந்த முச்சக்கர ஊர்தி மீது தமிழீழ விடுதலைப்புலிகளால் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் நேற்றுக் காலை 7.20 மணியளவில் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்துத் தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ச-5)

மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14

மிதிவெடிகள், வெடிபொருட்கள் அற்ற இடங்களில் மீளக் குடியேறுவோம்.

'சர்வோதயம்'

'யுனிசெவ்'

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை சமாதானப் படை மீது ஹெய்ட்டியில் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

ஹெய்ட்டியில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளஇலங்கைப் படையினர் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

ஹெய்ட்டியின் வோட்டோ குயின்ஸ் பகுதியிலேயே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கின்றது.

காயமடைந்த படைவீரர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களின் உடல் நிலை தற்போது தேறி வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

ஹெய்ட்டியில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பை அடுத்து கடந்த சில நாட்களாக அந்த நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் மோதல்களாக மாறியுள்ளதோடு ஐக்கிய நாட்டு அலுவலகங்கள் மற்றும் வாகனங்கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்களின் எதிர்ப்பை அடுத்து அந்த நாட்டின் வர்த்தக நிலையங்கள் மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

(ச-5)

# ஊடகவியலாளர்கள் குற்றச்சாட்டுகளின்றி தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணை

## அனைத்துலக ஊடகவியலாளர் அமைப்பு கவலை

(கொழும்பு)

ஊடகவியலாளர்களான திஸநாயகம் மற்றும் ஜசிகரன் ஆகியோர் எதுவித குற்றச்சாட்டுமின்றி தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அனைத்து ஊடகவியலாளர்கள் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

அனைத்து ஊடகவியலாளர்கள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மார்ச் 20ஆம் திகதியிலிருந்து அரசாங்கத்துக்கு சொந்தமான ரூபவாஹினி ஒளிபரப்பு கூட்டுத்தாபன ஊடகவியலாளர்களுக்கெதிரான வன்முறைகள் கைவிடப்பட்டுள்ளமையை அனைத்துலக ஊடகவியலாளர்களின் கூட்டமைப்பு வரவேற்கிறது.

இருப்பினும் அவுட்றிச் இணையத்தளத்தின் ஆசிரியரான ஜே.எஸ்.திஸநாயகம் கடந்த மார்ச் 7ஆம் திகதி கைது செய்யப்பட்டது முதல் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவரின் பாதுகாப்பு குறித்து க்வ்லை கொள்கிறோம்.

அவசரகால சட்டத்தின் கீழ் தொடக்கத்தில் 30 நாட்களுக்கு திஸநாயகம் தடுத்துவைக்கப்பட்டார்.

தலைமை நீதிமன்றத்தில் பிணைகோரி அவர் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பு நீதிமன்றமானது அவரது தடுப்புக் காவலை மே 5ஆம் திகதி வரை நீடிக்க பயங்கரவாத குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதித்தது.

திஸநாயகத்துக்கு எதிராக இதுவரை எதுவித குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை.

திஸநாயகம் மற்றும் ஈ குவாலிட்டி அச்சக உரிமையாளர் என்.ஜசிகரன் ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பிலான காரணங்களை சட்ட விசாரணைகளின்போது இலங்கையில் உள்ள ஊடகவியலாளர் அமைப்புக்களுடன் அனைத்துலக ஊடகவியலாளர் அமைப்பும் வலியுறுத்துகிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

# பலமுனை மோதல்களால் வடக்கில் பதற்றமான சூழல்

## ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியின் பல முனைகளில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறுவதால் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ளக இடம்பெயர்வுக்குள்ளாகும் மக்களின் தொகை அதிகரித்து வருவதாக ஐ.நா. முகவர் நிறுவனங்களின் நிலையியற் குழு தெரிவித்துள்ளது.

மோதல்கள் காரணமாக மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பதற்றமான சூழ்நிலை நிலவுவதாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கு கிழக்கு நிலைமைகள் தொடர்பாக ஐ.நா.முகவர் நிறுவனங்களின் நிலையியற் குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; பரப்பாங்கண்டல், பாலைக்குளி, பண்டிவிரிச்சான், மணலாறு, முகமாலை உள்ளிட்ட வன்னியின் பல முனைகளில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இதனால் வடக்கின் முன்னரங்க நிலைகளில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ளக இடம்பெயர்வு அதிகரித்துள்ளது. மோதல்கள் இடம்பெறும் முன்னரங்க பகுதிகளுக்கு அண்மையில் உள்ள மக்களும் புதிதாக மோதல்கள் வெடிக்கக்கூடும் எனக் கருதப்படும் பகுதிகளில் உள்ள மக்களும் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலுள்ள பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

மன்னார் மாந்தை மேற்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் பாதுகாப்பு கருதி கிளிநொச்சி பகுதிகளை நோக்கி இடம்பெயர்வதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன என்றுள்ளது.

(ச-5)

## மகோற்சவம்

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் 05ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் நாளை ஞாயிற்றுக்கிழமை 2மணிக்கு தேர், வீதி உலாவருதலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை 6 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(ச)

## தாயும் மகளும் ம.உ. குழுவில் சரண்

உயிர் அச்சுறுத்தல் காரணமாக தாயும் மகளும் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளனர்.

தாமோதரம்பிள்ளை வீதி சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த 44 வயதுடைய தாயும் 9 வயதுடைய அவரது மகளுமே சரணடைந்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் கஸ்தூரியார் வீதியைச்சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் சரணடைந்துள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(எ-4)

## க.பொ.த (சா/த) பெறுபேறு

**புற்றளை மகா வித்தியாலயம்**

ந.நிலூசியா (10ஏ); சி.தமிழ்ச்செல்வி (8ஏ, 2பி,சி); செ.மாதினி (7ஏ,2பி,சி); சி.நிசாந்தினி (5ஏ,3பி,சி); ந.அஜந்தன் (4ஏ,4பி,சி); த.தனுசியா (5ஏ,பி,2சி,2எஸ்); இ.சர்மிளா (3ஏ,2பி, 4சி,எஸ்); ச.ஆதிரை (3ஏ,2பி,3சி); ம.மெய்சாந் (2ஏ,4பி,3சி,எஸ்); அ.வினோஜா (2ஏ, 3பி,2சி,2எஸ்).

(ச-52)

## பணிப்பாளர் நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் புதிய பணிப்பாளராக இ.அ.திலகரட்ணம் நிரந்தர நியமனம் பெற்றுள்ளார். இவரது நியமனம் கடந்த வருடம் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## யாழ்.மாவட்டத்தில் முதலாவது இருபது-20 துடுப்பாட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக இருபது-20 துடுப்பாட்ட போட்டி யாழ்.பல்கலைக்கழக துடுப்பாட்ட அணிக்கும் யாழ்.பல்கலைக்கழக பழைய மாணவர்கள் அணிக்குமிடையில் நாளை காலை 9.00மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சிநேகபூர்வமான போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கிறிக்கெட் வீரரும் யாழ்.பத்திரிசியார் கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியருமாகிய எஸ்.சகாயராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

(ச-5)

## துடுப்பாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் ஈஸ்றவெஸ்ட் மாக்கற்றிங் பிறைவேட் லிமிடெட் அனுசரணையுடன் நடத்தப்படுகின்ற 5ஆவது அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.கிறிக்கெற் மத்தியஸ்தர் சங்கத் தலைவர் ஆர்.செல்வராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

இறுதிப்போட்டியில் பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தினைஎதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ச-5)

# வீரவன்சவுக்கு ஆதரவு வழங்கவில்லை பிரச்சினையைப் பேசித் தீர்க்கலாம்

## என்கிறார்கள் ஜே.வி.பியின் இரு எம்.பிக்கள்

(கொழும்பு)

விமல் வீரவன்சவுக்கு தாம் ஆதரவு வழங்கவில்லை எனவும் கட்சியில் ஏற்பட்டிருக்கும் பிளவை சீர்படுத்தும் நடவடிக்கையிலேயே தாம் ஈடுபட்டுவருவதாகவும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான் ரணவீர பத்திரணவும் சுஜாதா அழகக்கோனும் கூட்டாகத் தெரிவித்தனர்.

இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து நேற்று காலை கொழும்பில் நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டின்போது இதனைத் தெரிவித்தனர்.

விமல் வீரவன்சவுடன் பிரிந்து சென்றவர்கள் நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தாம் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கில் கலந்து கொள்ளவில்லை எனவும் கட்சியின் பிளவு குறித்து தமது கருத்தை தெரிவிக்கவே மேற்படி ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டதாகவும் ஆனால் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாததாலேயே தாம் நேற்றைய மாநாட்டைக் கூட்டியிருப்பதாகவும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்தனர்.

கட்சிக்குள் ஏற்பட்டிருப்பது சிறிய பிரச்சினை. அதனை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்திலும் செய்தியாளர் மாநாட்டிலும் கட்சியின் பிரச்சினை குறித்து பேசியமை தவறானது எனவும் சுட்டிக்காட்டினர்.

சில சக்திகளால் கட்சி திட்டமிட்டு பிளவு படுத்தப்பட்டுள்ளது. இதனைச் செய்தது யார் என்பது விரைவில் தெரியவரும். பிளவுபட்டிருக்கும் இரு தரப்பையும் ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம் என்றனர்.

இதேவேளை பிரிந்து சென்றுள்ளவர்கள் சிறிய குழுவினர் எனவும் அவர்களால் தனித்திருந்து எதனையும் சாதிக்கமுடியாது எனவும் புது வருடத்திற்குப்பின்னர் நாட்டு மக்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும் எனவும் இங்கு கருத்து வெளியிட்ட ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ரணவீர பத்திரண தெரிவித்தார்.

(ச-5)

## வலி.வடக்கு பிரதேச வசந்த விழா

(யாழ்ப்பாணம்)

பிறக்கவிருக்கும் தமிழ்- சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வலி. வடக்கு பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்டவர்களுக்கான வசந்த விழா நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் தயிர் முட்டி உடைத்தல், போர்த் தேங்காய் உடைத்தல், பலம் பார்த்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெற இருப்பதால் இதில் கலந்து கொள்ளும் ஆர்வலர்கள் அன்றைய தினம் குறித்த நேரத்திற்கு தெல்லிப்பழை செயலகத்திற்கு சமுகம் தரும்படி வலி.வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பா.இராஜகோபாலன் அறிவித்துள்ளார்.

(ஓ)


**R.V.A INTERNATIONAL MARRIAGE BUREAU**

வெளிநாட்டில் வசிக்கும் PR உடைய றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 1975-1985க்கு உட்பட்ட ஆண்கள், பெண்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் மணமகன், மணமகள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

ராஜா மாதா திருமண சேவை
இல.70, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
T.P:- 0779564944

(1051)



**JESWIN& POINTPEDRO PARISH COMPUTER INSTITUTE**

PARISHHOUSE, ST.THOMAS CHURCH
POINT- PEDRO

JESWIN & POINTPEDRO PARISH COMPUTER INSTITUTE - ST.THOMAS CHURCH POINTPEDRO

JPCI

T.P.No-0212263800

**கிராமிய மட்டத்தில் திட்ட அடிப்படையிலான இலவச கணனி பயிற்சி நெறி**

**Choice of Course**

- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Video Mixing
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Driving license
- Diploma in Accounting package

- Certificated Course in Internet &Email
- Certificated Course in GIT, ICT
- Certificated Course in Type setting
- Certificated Course in Auto Cad
- Certificated Course in Kids programme

சித்திரை புத்தாண்டில் இணையும் மாணவர்களுக்கு பரிசில்களும், குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் நபருக்கு விசேட அன்பளிப்பு

**விசேட சலுகைகள்**

- தகவல் தொழில்நுட்ப நூலகத்தில் அங்கத்துவம்
- தூரதேச மாணவர்களுக்கு போக்குவரத்துப்படி
- மாதாந்த ஊக்குவிப்புத்தொகை(கிராம சேவகரின் சிபாரிசுக்கமைவாக)
- வறிய மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பு
- கல்வி கற்கும் மாணவர்களுக்கு கடனடிப்படையில் கணனி இயந்திரம் வழங்கப்படும்.
- உத்தியோகத்தர்களுக்கான பிரத்தியேகமாக பயிற்சிநெறி

**விரையுங்கள்!! இணையுங்கள்!!**

| | | |
|---|---|---|
| 1st Batch 13.04.2008 | 2nd Batch 25.04.2008 | 3rd Batch 01.05.2008 |

(C-978)

## இன்று ஒரு தகவல்

### நாம் எந்த வகை

''வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது சார்...'' என்று சொல்லிக் கொண்டே ஒருவன் வந்தான். ''ஏன் இப்படிச் சொல்கிறாய்'' என்று கேட்டேன். ''நான் இந்த உலகத்துக்குத் தேவையே இல்லை'' என்றான் அவன். இந்த உலகத்திலே தேவையே இல்லாமல் எதுவும் இல்லை. இப்பொழுது உன் உடம்பிலே இருக்கிற காலை எடுத்து விடுவோமா? அது உனக்குத் தேவையில்லையே? என்றேன்.

''நடப்பதற்கு கால் வேண்டாமா?'' என்றான் அவன். ''சரி... கையை எடுத்து விடுவோமா?'' என்றேன். ''அப்புறம் சாப்பிடுவது எப்படி?'' என்றான்.

சரி... அப்படியென்றால் உனது உடம்பிலேயுள்ள தேவையில்லாத ஒரு பகுதியைச் சொல்லு... எடுத்து விடுவோம்... என்றேன். சிறிது நேரம் யோசித்த பின் அவன் சொன்னான் எல்லாமே அவசியமாகத்தான் தோன்றுகிறது "உனக்கு எல்லாம் அவசியம்... ஆனால் நீதான் இந்த உலகத்துக்கு அவசிய மில்லை...? அப்படித்தானே...'' என்றேன். அவன் குழம்ப ஆரம்பித்தான்.

இன்று ஏராளமான இளைஞர்கள் இப்படித்தான் தம்மிடம் என்ன இருக்கிறது என்பது தெரியாமலே தடுமாறுகிறார்கள். அவர்கள் யார் என்பது அவர்களுக்கே அடையாளம் தெரிவதில்லை. ஆடு; மாடுகளுக்குக்கூட அவற்றின் திறமை எது என்பது அவற்றுக்குத் தெரிகிறது. நம்மால் எது முடியும்? எது முடியாது என்பது அவற்றுக்கு நன்றாகத் தெரிகிறது. விலங்குகள், பறவைகளைப் போல விண்ணில் பறக்க வேண்டுமென ஆசைப்படுவதில்லை.

இந்த உலகத்திலே இருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனித்திறமை உண்டு. ஒருவன் மாதிரி இன்னொருவன் இருப்பதில்லை. உளவியல் நிபுணர்கள் மனிதர்களின் குணாதிசயங்களை வைத்து அவர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள்.

சிலர் தான் சம்பந்தப்பட்ட வேலையோடு மாத்திரம் இருந்து விடுவதில்லை. எதிரே இருப்பவர்கள் செய்கிற வேலை இன்னொரு பிரிவிலே இருப்பவர்கள் செய்கிற வேலை எல்லாவற்றிலும் தலையிடுவார்கள். மனோதத்துவத்தில் இதற்கு Dominance என்று பெயர்.

இப்படிப்பட்ட குணாதிசயம் உள்ளவர்கள் ஒரு நிறுவனத்தைத் தலைமை ஏற்று நடத்துவது, நிர்வாகப் பொறுப்பு வகிப்பது போன்ற பணிகளுக்கு மிகவும் பொருத்தமாக இருப்பார்கள்.

இரண்டாவது வகை மனிதர்கள் இனிமையாகப் பேசுவார்கள். திறமையாகப் பேசுவார்கள். அடுத்தவர்களோடு பேசுவதற்கு ஆசைப்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் விற்பனைத் துறையில் வேலை பார்ப்பதற்குப் பொருத்தமானவர்கள்.

மூன்றாவது வகை மனிதர்களுக்கு பகுத்துணரும் ஆற்றல் உண்டு. உறுதிப்பாடு உண்டு. அடுத்தவர்களோடு அதிகம் பேசமாட்டார்கள். இன்னும் சொல்லப் போனால்... நாலு பேரோடு பேசுவதே இவர்களுக்குப் பிடிக்காது செய்கிற வேலையை நுணுக்க மாகச் செய்வார்கள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அது சம்பந்தமான எல்லா விபரங்களையும் சேகரிப்பார்கள். இந்தவகை மனிதர்களுக்கு ஆராய்ச்சிவேலை, கணக்குவேலை முதலிய பொறுப்புகளைக் கொடுக்கலாம்.

ஒவ்வொரு மனிதனையும் கொஞ்சம் கூர்ந்து பாருங்கள். அவனுக்குள்ளே இந்த மூன்றுவிதமான திறமைகளும் உண்டு. எது அதிகம்; எது குறைவு என்பதில் தான் வித்தியாசம். நாம் ஒவ்வொருவரும் கொஞ்சம் சுயமாக சிந்திக்க வேண்டும். நாம் எந்தவகை என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும்.

இப்போதுசொல்லப்பட்ட மூன்று குணங்களுமே ஆளுமை சம்பந்தப் பட்டது. இதில் ஒருவருடைய இயல்பு, திறமை இவையெல்லாம் அடங்காது. இவை எல்லாம் தனி. இவற்றை யார் நினைத்தாலும் முறையான பயிற்சிகள் மூலம் வளர்த்துக்கொள்ளலாம்.

முன்னர் சொன்னது போல, நாம் எந்தவகையான ஆசாமி என்பதைப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்த மாதிரி ஒரு வேலையைத் தேடிக்கொண்டால் வாழ்க்கை நல்ல விதமாக அமையும்.

''நான் இந்த உலகத்துக்கு; தேவை இல்லை'' என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் சேவை உதவியாளர் நேர்முகப் பரீட்சை

கடந்த வருடம் மார்கழி மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற வாடிக்கையாளர் சேவை, உதவியாளர் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம், மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகம், கன்னா திட்டியில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக மக்கள் வங்கி வட வலய உதவிப் பொது முகாமையாளர் த.ஆனந்தராஜா அறிவித்துள்ளார்.

**18ஆம் திகதி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர்.**

கே.அபிராமி - யாழ்ப்பாணம், ஜி.ஜி.அஜந்தா - அளவெட்டி, கே.அஜந்தன் - யாழ்ப்பாணம், ஜி.அனோஜா - கொடிகாமம், எம்.அனுஜா- யாழ்ப்பாணம், எஸ்.ஆரணி- பருத்தித்துறை, எ.ஆர்த்தி- யாழ்ப்பாணம்.

எம்.அருள்வேல்-யாழ்ப்பாணம், ரி.அஸ்வினி-அச்சுவேலி, கே.பானு - கரவெட்டி, எஸ்கே.பானுஜா-எழுதுமட்டுவாழ், எம்.பானுஷா-சாவகச்சேரி, எஸ்.பிருந்தா - சண்டிலிப்பாய், ஜி.கிருஷ்திராஜா-பருத்தித்துறை, ஜே.பான்சி-யாழ்ப்பாணம், கே.டிலானி-யாழ்ப்பாணம், ரி.கானப்பிரியா-வல்வெட்டித்துறை, பி.கஜேந்திரன்-யாழ்ப்பாணம், கே.கஸ்தூரி-யாழ்ப்பாணம்.

கே.காயத்திரி-அளவெட்டி, என்.கிரானு-யாழ்ப்பாணம், வி.ஞானவேல்-யாழ்ப்பாணம், கே.கோகுலகிருஸ்ணன்-சுன்னாகம், ரி.ஹர்ஸன்-யாழ்ப்பாணம்,பி.ஹேமலலிதா-யாழ்ப்பாணம், எம்.ஹேமபிரியா-மானிப்பாய், கே.ஜனனி-யாழ்ப்பாணம், கே.யசோதாதேவி- யாழ்ப்பாணம், ஆர்.ஜிந்துஜா-கரவெட்டி, எஸ்.ஜிந்துஜா-இணுவில், எ.டி.டி.ஜோசேப்-யாழ்ப்பாணம், எஸ்.யூடிட்பபிணா-யாழ்ப்பாணம், பி.கஜேந்திரா-யாழ்ப்பாணம், ஜே.கஜமுகி-யாழ்ப்பாணம், எஸ்.காயத்திரி-வல்வெட்டித்துறை, கே.கமலக்சன்-சுன்னாகம்.

வி.கார்த்திகா - அச்சுவேலி, எஸ்.ஆர்.கீர்த்திகா-யாழ்ப்பாணம், சி.கிரீடன் - யாழ்ப்பாணம், எஸ்.கோகிலா-பருத்தித்துறை, ரி.கோகுலவதனன்மீசாலை, கே.கோசலா-கோண்டாவில், எஸ்.கோவர்த்தனி-நயினாதீவு, ரி.கிருஷ்ணசாமி-சுழிபுரம், ஜே.குகன்யா-யாழ்ப்பாணம், எஸ்.எம்.குருப் பிரியா -கரவெட்டி, பி.இ.எ.லொறிட்-யாழ்ப்பாணம், டி.ஜி.லக்சாந்தி-யாழ்ப்பாணம்.

சி.லக்சனா-மானிப்பாய், எஸ்.எஸ்.மாதுங்கி-கரவெட்டி, எஸ்.மகிழினி-யாழ்ப்பாணம், எம்.மாணிக்கராஜா-பருத்தித்துறை, கே.மதனிகா -யாழ்ப்பாணம், கே.மாதினி-சுன்னாகம், எம்.மாதுளா-மானிப்பாய், கே.மதுரகன்-யாழ்ப்பாணம், எம்.மதுஷா-யாழ்ப்பாணம், எஸ்.மயூரன்-சாவகச்சேரி, டபிள்யூ.மயூரா-மானிப்பாய், வி.எம்.மயூரன்-வட்டுக்கோட்டை, கே.நாகேந்திரன்-கொடிகாமம்.

கே.நிரஞ்சனி-யாழ்ப்பாணம், ஜி.நிலோஜினி-யாழ்ப்பாணம், எஸ்.நிமலை-யாழ்ப்பாணம், கே.நிமாலினி-புத்தூர், ஏ.நிமாலினி-புலோலி, சி.நிருசாந்தி-யாழ்ப்பாணம், எஸ்.நிசாந்தன்-பருத்தித்துறை, ஆர்.எம்.நித்தியா-யாழ்ப்பாணம், ரி.பவித்திரா-வேலணை, ஆர்.பிரசாந்தினி-உடுப்பிட்டி, ரி.பிரியதர்சினி-யாழ்ப்பாணம்.

**19ஆம் திகதி அன்று நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர்.**

எஸ்.பிரசாந்தி-யாழ்ப்பாணம், எஸ்.ரஜீவன்-யாழ்ப்பாணம், ரி.ரஜீவன்-கொக்குவில், ரி.ரஜிந்தன்-எழுதுமட்டுவாழ், எம்.ரஞ்சனா-வட்டுக்கோட்டை, எஸ்.இ.ராதிகா-கரவெட்டி, ஐ.எம்.ரெபேக்கா-ஊர்காவற்றுறை, எஸ்.றூபகாந்தன்- யாழ்ப்பாணம், பி.ஷபாசனா-யாழ்ப்பாணம், என்.சஞ்ஜீவ்-யாழ்ப்பாணம், ஏ.பி.சஞ்சீவ்-யாழ்ப்பாணம், பி.சங்கீதா-பருத்தித்துறை, ஜி.சரண்யா-கொக்குவில், எஸ்.சசீவன்-நீர்வேலி, வை. சசிரேகா-யாழ்ப்பாணம், ஆர்.சசிதா- புத்தூர்.

ரி.சசிதேவி-மானிப்பாய், எஸ்.சற்சொரூபன்-புத்தூர், ஆர்.கே.சயந்தினி-யாழ்ப்பாணம், ரி.சயந்தினி-யாழ்ப்பாணம், எஸ்.செல்வமலர்-மானிப்பாய், ஜி.ஷாலினி-யாழ்ப்பாணம், பி.சண்முகராஜா-நல்லூர், ஜே.ஷராச்சி-யாழ்ப்பாணம், ரி.ஷர்மிளா-இளவாலை, ஆர். ஷர்மிளி-ஏழாலை, எக்ஸ்.ஏ.ஷரன் அஞ்சலா-யாழ்ப்பாணம், எவ்.ரி. எல்.சிந்து-யாழ்ப்பாணம், கே.சிந்துஜா-யாழ்ப் பாணம், பி.சிந்துஜா-கொக்குவில் மேற்கு, எஸ்.சிந்துஜா-யாழ்ப்பாணம், எல்.சிந்துசா-யாழ்ப்பாணம்.

எஸ்.சிவான் - யாழ்ப்பாணம், எஸ்.சிவரதன்-யாழ்ப்பாணம், ரி.சிவதர்சினி - பருத்தித்துறை, எஸ்.சியாமளா-யாழ்ப்பாணம், கே.ஸ்ரீ.ஜனனி-யாழ்ப்பாணம், எஸ்.ஸ்ரீ.சயந்தினி-யாழ்ப்பாணம், எம்.சுபாஜினி-யாழ்ப்பாணம்.

கே.சுபாசினி-கரவெட்டி, பி.சுப்பிரமணியம்-கரவெட்டி, எஸ்.சுஹாசினி-யாழ்ப்பாணம், எஸ்.சுஜன்-கொக்குவில், எஸ்.சுமனா-கைதடி, கே.சுமித்திரா-கோப்பாய், எஸ்.சுரேக்கா-சாவகச்சேரி, எல்.சுரேன்-கொக்குவில், கே.தனுஜா-மானிப்பாய், எஸ்.தர்சிகா-யாழ்ப்பாணம்.

வி.தர்சிநாத்-யாழ்ப்பாணம், ரி.தயாஜீவிதன்-மிருசுவில், பி.தயாளினி-திருநெல்வேலி, வை.தயாபரம்-யாழ்ப்பாணம், கே.எஸ்.தேனுதயா-யாழ்ப்பாணம், பி.தேவரஞ்சனா-சங்கானை, கே.எஸ்.திருலோகநாயகி-வட்டுக்கோட்டை, என்.திருமகள்-காரைநகர், எஸ்.திருச்செல்வம்-யாழ்ப்பாணம், எஸ்.தியாகலிங்கம்-யாழ்ப்பாணம்.

எஜ்.துளசிதா-இணுவில், எஸ்.துவாரகா-யாழ்ப்பாணம், வி.ரொனிஜோய்-யாழ்ப்பாணம், எஸ்.உஷாநந்தினி-மானிப்பாய், எஸ்.பி.உதயசாந்தி-உடுப்பிட்டி, ஆர்வாகீனா-சுன்னாகம், வை.வானதி-யாழ்ப்பாணம், கே.விக்னேஸ்வரி-யாழ்ப்பாணம், ஏ.ஆர்.விஜயநிதி-மானிப்பாய், எம்.கே.விஜிதா-வல்வெட்டித்துறை, எஸ்.வினோசாந்த்-யாழ்ப்பாணம், என்.வித்தியா-கோண்டாவில், எஸ்.யாழினி-பருத்தித்துறை. (அ)

## இராசிபலன்

12.04.2008
(பங்குனி 30, சனிக்கிழமை)
திருவாதிரை பிற்பகல் 01.01 மணிவரை
ஸப்தமி மாலை 06.10 மணி வரை
இராகுகாலம் 09.06-10.36 மணிவரை
சுபநேரம் 03.06-04.36 மணிவரை
நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமி குருபூசை

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், போசன சுகம், நல்ல செய்தி, நண்பர்கள் உதவி. |
| இடபம் | உணர்ச்சிவசப்படுதல், முயற்சி தாமதம், பணவிரயம். |
| மிதுனம் | நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, தெய்வசிந்தை. |
| கடகம | பிரயாணம், காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, சயனசுகக்குறைவு. |
| சிங்கம் | உறவினர் கலந்துரையாடல், எடுத்தகாரியம் கைகூடும். |
| கன்னி | கடின முயற்சி, அதிகாரம், நண்பர்கள் உதவி, நல்ல செய்தி. |
| துலாம் | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, எடுத்தகாரியம் தாமதமாகும். |
| விருச்சிகம் | உஷ்ணவியாதி, அமைதிக்குறைவு, பிரயாண பயம், முயற்சி தாமதம். |
| தனுசு | காரிய அனுகூலம், நல்ல செய்தி, போசனசுகம், களஸ்திர நன்மை. |
| மகரம் | ஆரோக்கியம், பெரியோர் சந்திப்பு, முயற்சி கைகூடும், தொழில் விருத்தி. |
| கும்பம் | வியாபார சிந்தை, ரோகநிலை, காரிய தாமதம், பணக்குறைவு. |
| மீனம் | மாதாசுகம், மனச்சஞ்சலம், காரிய தாமதம், புதிய விடயம். |

வளவன்



பாலகணபதி துணை
அல்வாய் சாமணந்தறை
ஆலடிப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம்
உஆம் நாள் மாம்பழத் திருவிழா
(12.04.2008)
ஆலடியேகி ஆனைமுகனைத் தொழுது ஆங்கண்
காலடியை பணிவாரே காதலாகி - மூலவன்
மும்மலம் அறுத்தென்றும் காத்திடுவான் முனைப்புற
தும்பிக்கரன் துதிப்பார்க்கு துணையாகி

வாதாபி கணேசன் காங்கேயன் சோதரனே
எமைஆளும் ஆலடி ஐங்கரனே
ஆதாரமே வாழ்வின் மூலாதரனே
மும்மல மாயை அறுத்திடும் அங்குசனே
சூதாகும் வாழ்வின் சுழலுக்குள் சிக்காமல்
நானாகும் அகந்தையின் ஆழ்கடல் மூழ்காமல்
மாதங்கிமகனே மாண்புறும் வாழ்வழிப்பாய்
வல்லபனே வளம்பொங்கி நலம் ஓங்கவே
(1052) அல்வாயூர் சி.சிவநேசன்





செலிங்கோ ஆயுட் காப்புறுதி நிறுவனத்தின் நெல்லியடி மற்றும் அச்சுவேலி கிளை ஒன்றிணைந்து இலவச இரத்ததான முகாம் ஒன்றினை நெல்லியடி கிளையில் அண்மையில் நடத்தின. இதன்போது அச்சுவேலி கிளை முகாமையாளர் பிரதீப் இரத்ததானம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# கொள்ளைச் சந்தேக நபர் நீதிமன்ற அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டார்

(பருத்தித்துறை)

வடமராட்சிப்பிரதேசத்தில் பயங்கரக் கொள்ளைகளில் ஈடுபட்ட கொள்ளைக் கோஷ்டி தலைவர் எனக் கருதப்படும் கொள்ளைச் சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் 3 கொள்ளைச் சம்பவ சாட்சிகளால் அடையாளம் காட்டப்படுள்ளார்.

தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள இக் கொள்ளைச் சந்தேக நபர் மேலும் கொள்ளைச் சம்பங்களில் அடையாள அணி வகுப்பிற்கு உட்படுத்தப்படவுள்ளார்.

வடமராட்சி பிரதேசத்தில் பல பயங்கரக் கொள்ளைகளில் ஈடுபட்ட சந்தேக நபர் பொலி ஸாரிடம் அகப்படாமல் தலைமறைவாக இருந்துவந்துள்ளார்.

எனினும் பருத்தித்துறை நீதிபதி கே.அரிய நாயகம் நெல்லியடிப் பொலி ஸாருக்கு விடுத்த விசேட பணிப்பையடுத்து நெல்லிய டிப் பொலிஸார் கொள்ளைச் சந்தேக நபரை மடக்கிப்பிடித்து பருத்தித்துறை நீதிமன் றில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு அவரை அடை யாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறு பணித் திருந்தார்.

சந்தேகநபர் மிகவும் பாதுகாப்பான முறை யில் கடந்த 10,11ஆம் திகதிகளில் பருத்தித் துறை நீதிமன்றத்தில் பதில் நீதிபதி பி.குமார சாமி முன்னிலையில் அடையாள அணிவகுப் பிற்குட்படுத்தப்பட்டார். மூன்று கொள்ளைச் சம்பவ சாட்சிகள் சந்தேக நபரை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டியுள்ளனர். அடையாளம் காட்டப்பட்ட சந்தேக நபர் மீண் டும் பருத்தித்துறை நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகவும் சந்தேக நபரை அடையாள அணிவகுப்பிற் குட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள சந்தேக நபர் ஏனைய கொள்ளைச் சம்பவங்களுக்காகவும் அடையாள அணிவகுப் பிற்குட்படுத்தப்படவுள்ளார்.

இக்கொள்ளைகள் தொடர்பாக தொடர்ந் தும் விசாரணைகளை மேற்கொண்டு ஏனைய சந்தேக நபர்களை கைது செய்யுமாறும் கொள்ளைப் பொருட்களை மீட்டு மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-52)




## கடமை நிறைவேற்று அதிபர் நியமனம்

(அல்வாய்)

தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் கடமை நிறைவேற்று அதிபராக கா. இராமஜெயம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் 19.04.2008 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்துள்ளார்.

இதேவேளை, இப் பாடசாலையில் இது வரை அதிபராகக் கடமையாற்றிவந்த வீ.வடி வேலு தனது 60ஆவது வயது பூர்த்திய டைந்து ஓய்வுபெறவுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஓ-19)

## விஞ்ஞானம்,கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தேர்ச்சிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்க மைய தரம் 6-11 வகுப்புகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கும் யாழ்ப்பாணம் வலயத்தைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களுக்குமான தேர்ச்சிப் பரீட்சை 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலயத்தைச் சேர்ந்த 6-11 வகுப்புக ளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்க ளைக் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் தவறாது இப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ)

# கலை இலக்கிய போட்டி முடிவுகள்

கலாசார அலுவல்கள் திணைக்களத் தினால் வலி.தெற்கு உடுவில் பிரதேச மட்டத் தில் நடாத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டி முடிவு கள் வருமாறு,

**கட்டுரை கனிஷ்ட பிரிவு**

1ஆம்இடம்: அ.சாம்பவி- கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி., 2ஆம் இடம்: செ.யசோதா- உடுவில் முருகமூர்த்தி வித்தி., 3ஆம் இடம்: செ. சர்வகா- கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.

**கட்டுரை கனிஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:அ.நேதிகா -இணுவில் மத்திய கல்லூரி, 2ஆம் இடம்: வே. பிரசில்வா ராதிகா -ஏழாலை சைவமகாஜனா வித்தி.

**கவிதை கனிஷ்ட பிரிவு**

1ஆம் இடம்: செ.சர்வகா -கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி., 2ஆம் இடம்:செ. நித்தியா ஏழாலை மகா வித்தி., 3ஆம் இடம்: ச.மேரிகனுஷா ஏழாலை சைவ மகாஜனா வித்தி.

**கவிதை சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம்: நி.நிஷாந்தி- இணுவில் மத்திய கல்லூரி, 2ஆம் இடம்:ச.லூட்விதுஷா- ஏழாலை மகாவித்தி., 3ஆம் இடம் த.கல்யாணி இணுவில் மத்திய கல்லூரி.

**சிறுகதை கனிஷ்ட பிரிவு**

1ஆம் இடம்: செ.யசோதா- உடுவில் முருக மூர்த்தி வித்தி., 2ஆம் இடம்: கோ. சங்கீதா- ஆத்மஜோதி தியான மணிமண்டப அறநெறி பாடசாலை, 3ஆம் இடம்: வி.மிதிலா -உடுவில் முருகமூர்த்தி வித்தி.

**சிறுகதை சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:த. நாரணி-இணுவில் மத்திய கல்லூரி, 2ஆம் இடம்: வ.ராஜரூபன்- ஸ்கந்த வரோதயா கல்லூரி., 3ஆம் இடம்: த.டினோஜா- தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

**சிறுகதை திறந்த பிரிவு**

1ஆம் இடம்:வே.கிரிசா-வங்கியடி இணு வில் கிழக்கு, 2ஆம் இடம்: ச.நளாயினி- மயிலணி, 3ஆம் இடம்: சு.பரமேஸ்வரலிங்கம் இணுவில் தெற்கு.

**பாடலாக்கம் திறந்த பிரிவு**

1ஆம் இடம்: ச.நாளாயினி -மயிலணி, 2ஆம் இடம்: ந.கருணைதாசன்- கந்தரோடை, 3ஆம் இடம்: ச.ஜெயந்தன்-இணுவில் தெற்கு.

**கவிதை திறந்த பிரிவு**

1ஆம் இடம்: பா. பாலச்சந்திரன்- மயிலணி, 2ஆம் இடம்: ஆலயமணியம்- ஏழாலை, 3ஆம் இடம்: சி.சண்முகவடிவேல் - ஏழாலை மேற்கு.

**சிங்களக் கவிதை**

1ஆம் இடம்:க.அருந்தவராசா- தாவடி தெற்கு. (ஓ)

# கல்வி வலயங்களுக்கு கணனி உபகரணங்கள்

(அல்வாய்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் யாழ்.மாவட்ட மாணவர்களின் கற்றல், கற்பித் தல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கு டன் யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுக்கு 33 கணனிகள், 23 பிறின்ரர், 5 புகைப்படப் பிரதி இயந்திரம் ஆகிய சாதனங்கள் வழங்கப்பட் டுள்ளது.

இவை கீழ்வருமாறு வலயங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

| வலயம் | கணனி | அச்சிடும் இயந்திரம் | புகைப்படப் பிரதி இயந்திரம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 7 | 5 | 1 |
| வலிகாமம் | 8 | 6 | 1 |
| வடமராட்சி | 6 | 4 | 1 |
| தென்மராட்சி | 5 | 3 | 1 |
| தீவகம் | 7 | 5 | 1 |
| | 33 | 23 | 5 |

அத்துடன் நவோதயாப் பாடசாலைகளுக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் 5 உம், தொலை நகல் இந்திரம் 2உம், புகைப்படப் பிரதி இயந்திரம் 1உம் வழங்கப்பட்டுள்ளன.

இவை வலிகாமத்து 1, வடமராட்சிக்கு 2, தீவகத்துக்கு 2 என்ற வகையில் ஒலிபெருக்கி சாதனமும், தொலைநகல் இயந்திரம் யாழ்ப் பாணத்துக்கும் வலிகாமத்திற்கும் ஒவ்வொன் றும் புகைப்பட இயந்திர தென்மராட்சிக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் முறைசாராக் கல்விப் பிரிவுக் கென வலிகாமத்திற்கும், தீவகத் திற் கும் தலா ஒவ்வொரு கண னியும் வழங்கப் பட்டுள்ளன.

வலிகாமம், வடமராட்சி, தென்ம ராட்சி, தீவகம் ஆகிய வலயங்க ளுக்கு தலா ஒவ்வொரு குளிர்சாத னப் பெட்டிகளும், பலசமையல் சாதனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. (ஓ-19)

## பிரதேசமட்டக் கூட்டங்கள்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செய லகத்தின் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் அதே தினம் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் காலை 10.30 மணிக்கும் நடைபெறும் என பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள் ளார். (ஓ)

## யாழ்.கல்வி வலயத்தில் இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கான வேதனம்

வெளிமாவட்டங்களில் கடமையாற்றி தற் பொழுது யாழ். கல்வி வலயத்தில் இணைப்புப் பெற்றிருக்கும் ஆசிரியர்களுக்கான ஏப்ரல் மாத வேதனம், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு 15ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும், ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்த வர்களுக்கு 16 ஆம் திகதி புதன்கிழமையும் வழங்கப்பட வுள்ளதாகவும், இதற்கு முந்திய மாதங்களுக்கான வேதனம் இதுவரை பெற் றுக்கொள்ளாவிடில் அதனையும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். கல்வி வலய கணக் காளர் அறிவித்துள்ளார். (ஓ)

## பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை விண் ணப்பித்த அலுவலர்களுக்கான பரீட்சை எதிர் வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை நடை பெற ஏற்பாகியுள்ளதர்க யாழ் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாள ரின் அறிவித்தலுக்கிணங்க பிற்போடப்பட்ட தாகத் தெரிவிக்கப்ப[illegible]து. (அ)

## சித்திரைப் [illegible]த்தாண்டு கலை நிகழ்வுகள்

திருமறைக் கலாமன்றத்தினால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட் டுள்ள கலை நிகழ்ச்சிகள் 13ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். திரு மறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் யாழ் .திருமறைக்கலாமன்ற இளையோர் அவையினரின் வசந்தன் ஆட்டம், திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை மாண விகளின் 'ஏகலைவன்' ,தென்மோடி நாட்டுக் கூத்து இளவாலை திருமறைக் கலாமன்றத் தின் நடனங்கள் உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (ஓ)

## சிறுவர் சித்திரம் மற்றும் அழகியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகி யல் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப் பட்டு ள்ள அக்கல்லூரியில் சித்திரம் பயிலும் சிறுவர் களினதும் மற்றும் அழகியல் கலை பயிலும் மாணவர்களினதும் ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தும் சித்திர அழ்கியல் கண்காட்சி எதிர்வரும் 13,14 ஞாயிறு, திங்கள் ஆகிய இருநாள்களிலும் மு.ப. 10மணிமுதல் பி.ப4 மணிவரை இல 128 டேவிற் வீதியில் அமை ந்துள்ள கலைக்கோட்டத்தில் இடம்பெறவுள் ளது.

இக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக மூத்த ஓவியர் எஸ். சிவசுப்பிரமணியம் (ரமணி) யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தைச் சேர்ந்த அ.சத்திவேல் மற்றும் திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகள் ஆகி யோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (அ)

## விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக் களத்தினால் யாழ்ப்பாண பிரதேச செயலகத் தினூடாக ஐந்து மாத காலத்திற்கான மொபைல் போன் திருத்தும் பயிற்சிநெறி ஆரம்பிக்கப் படவுள்ளதனால், இப் பயிற்சி நெறியினை நடாத்தும் போதனாசிரியர்களிடமிருந்தும் இப் பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சி பெற விரும்புவோரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்விரு பிரிவு விண்ணப்பதாரிகளும் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத் தினை பிரதேச செயலர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ-6)



பருத்தித்துறை பிரதேச சபைக்கு விஜயம் செய்த வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சனை பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதி மாலையணிவித்து வரவேற்பதையும், வடக்கு மாகாண கணக்காய்வுப் பணிப்பாளர் எஸ்.சிவகுரு உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பருத்தித்துறை நிருபர்)

## மியன்மாரிலிருந்து தாய்லாந்துக்கு

# மூடிய லொறியில் கடத்தப்பட்ட 54 பேர் மூச்சுத் திணறி மரணம்



தாய்லாந்து நாட்டில் குடியேறி வேலை செய்வதற்காக மியன்மாரைச் சேர்ந்தவர்கள் மூடிய லொறியினுள் திருட்டுத்தனமாக சென்ற போது மூச்சுத்திணறி இறந்தனர்.

மியன்மார் இராணுவ ஆட்சியில் உள்ள நாடுஆகும். இறுக்கமான நாடு. பொருளாதார வளர்ச்சி குறைவாக உள்ள நாடு. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம் உள்ளது.

படித்த இளைஞர்கள் அண்டை நாடான தாய்லாந்தில் திருட்டுத்தனமாகக் குடியேறி அங்குள்ள தொழிற்சாலைகளிலும் ஹோட்டல்களிலும், பெற்றோல் நிலையங்களிலும் வேலை பார்த்து வருகிறார்கள். இப்படி திருட்டுத்தனமாகக் குடியேறிய மியன்மார் நாட்டினர் எண்ணிக்கை 10 இலட்சம் ஆகும்.

மியன்மார் நாட்டு இளைஞர்களை திருட்டுத்தனமாக தாய்லாந்து நாட்டுக்கு அனுப்பி வைப்பதில் தரகர்கள் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அவர்கள் பெருந் தொகைப் பணம் வசூலிக் கிறார்கள்.

தாய்லாந்து நாட்டுக்கு அனுப்பி வைக்கப் படுவதற்காக 100-க்கும் மேற்பட்ட மியன்மார் இளைஞர்கள் ஒரு மூடிய லொறியில் நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்டனர். மியன்மார் நாட்டு எல்லையில் ரானோங் மாநிலத்தில் லொறியை டிரைவர் நிறுத்தினார். கதவைத் திறந்துவிட்டார். அப்போது லொறியில் இருந்து மியன்மார் இளைஞர்கள் இறங்கி வெளியேறுவதற்காக அவர் இப்படிச் செய்தார்.

அப்போது தான் அதில் பயணம் செய்த 54 பேர் பலியாகியிருப்பது தெரியவந்தது. அந்த மூடியலொறி காற்றுப் புக முடியாத அளவிற்கு அனைத்துப் பகுதியிலும் மூடப்பட் டிருந்தது. குளிர் பதனம் செய்யப்பட்டிருந்தது. குளிர்பதன வசதி திடீரென்று துண்டிக்கப்பட்டதால், அவர்கள் மூச்சுத்திணறி செத்தனர். இறந்தவர்களில் 37 பேர்பெண்களாவார்கள். லொறிக்குள் மூச்சு விட திணறிக்கொண்டிருந்த 67பேர் மீட்கப்பட்டனர். அவர்களில்மோசமானநிலையில் இருந்த 20பேர் உடனடியாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

லொறியில் அழைத்துவரப்பட்டவர்கள் எவ்வளவு தூரம் அந்த லொறியில் பயணம் செய்தார்கள் என்பதும் , எவ்வளவு நேரம் குளிர் பதன வசதி துண்டித்த நிலையில் பயணம் செய்தார்கள் என்பது தெரியவில்லை என்று தாய்லாந்து பொலிஸார் தெரிவித்தனர். (அ-5)

## கார்குண்டு வெடிப்பில் 8 ஆப்கானிஸ்தானியர் பலி

ஆப்கானிஸ்தான் நாட்டில் காந்தகார் நகரில் கார் குண்டுவெடித்தது. இதில் 8 ஆப்கானிஸ்தானியர்கள் பலியானார்கள். 2 பொலிஸ்காரர்கள் உட்பட 20 பேர் காயம் அடைந்தனர். இந்தத் தகவலை பொலிஸ் தலைமை அதிகாரி சையத் அக்பா தெரிவித்தார்.

நேட்டோ இராணுவ வீரர்களை குறிபார்த்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் அவர்கள் காயமின்றி தப்பித்தனர். (ஓ-5)

## உலக தரிசனம்



கரண்டிகளை வைத்து உலக சாதனையை முறியடித்துள்ள பிரிட்டனைச் சேர்ந்த 9 வயது ஜோ.அலிசான் படத்தில் கரண்டிகளுடன் காணப்படுகின்றான்.

இது தொடர்பான செய்தி கடந்த 5ஆம் திகதி வலம்புரியில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் வன்முறைத் தாக்குதலில் 7பேர் பலி அலுவலகங்கள், வாகனங்களுக்கு தீ வைப்பு



பாகிஸ்தானின் கராச்சி நகரில் இரு எதிர் சட்டத்தரணி களின் குழுக்களி டையேயான மோதல் களின் பிற்பாடு இம் ற்ற வன்முறை களில் குறைந்தது. 7 பேர் பலியானதுடன் 12 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.முன்னாள் அமைச்சர் ஷெர் அப்கான் நியாஸி கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதி முஷாரப்பின் ஆதரவு சட்டத்தரணிகள் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஏனைய கட்சிகளின் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டவர்களை தாக்க முற்பட்டபோதே வன்முறை வெடித்ததாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் முஷாரப்பின் ஆதரவு கட்சியான எம்.கியூ.எம். ஆதரவாளர்கள் பாரிய வன்முறைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது கராச்சி நகர நீதிமன்றத்துக்கு அண்மையில் சட்டத்தரணிகளின் அலுவலகங்கள் அமைந்திருந்த கட்டடமும் எரியூட்டப்பட்டது.அச்சமயம் மேற்படி கட்டடத்தின் ஆறாம் மாடியில் அமைந்திருந்த அப்தாப் அப்பாஸி என்ற சட்டத்தரணியின் அலுவலகத்திலிருந்து 5 பேர் அக் கட்டடத்திலிருந்து வெளியேற முடியாது தீயில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர்.இறந்தவர்களில் பெண் ஒருவரும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.மேலும் மேற்படி சம்பவத்தையடுத்து சில மணி நேரம் கழித்து மோட்டார் சைக்கிளில் அங்கு வந்த வன்முறையாளர்களால் 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இதன் காரணமாக நகரமே புகை மண்டலமாககாட்சியளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வன்முறைத் தாக்குதலில் முஷாரப்பின் ஆதரவுக் கட்சியான எம்.கியூ.எம். முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம்லீக் என்கட்சிபடுகொலைசெய் யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகிய கட்சிகளின் ஆதரவாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப் படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை முன்னாள் அமைச்சரான ஷெர் அப்கான் நியாஸியை சட்த் தரணிகள் குழுவொன்று கைகளாலும் பாதணி களாலும் தாக்க முயற்சித்த சம்பவத்தையடுத்து சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் அயிட்ஸாஸ் அஹ்ஸன் தனது பதவியை இராஜினாமா செய்வ தாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. அதேசமயம் பேர்னாஸ் வீதியில் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தனியார் மருத்துவமனை சாரதியொருவர் பலியாகியுள்ளார். அத்துடன் மினி பஸ் சாரதியொருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். (அ-5)

# சிம்பாப்வே நிலைமை குறித்து ஆராய ஆபிரிக்க சமூகத்தின் அவசரக்கூட்டம்

(சிம்பாப்வே)

சிம்பாப்வேயில் நடைபெற்ற தேர்தல்களுக்கு பிறகு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைமை குறித்து விவாதிப்பதற்காக தெற்கு ஆபிரிக்க வளர்ச்சி சமூகத்தின் அவரச் கூட்டம் ஒன்றுக்கு சாம்பியா அழைப்பு விடுத்துள்ளது.

சாம்பியா நாட்டின் அதிபரான லீவி மவானவாசா விடுத்துள்ள இந்த அழைப்பானது, சிம்பாப்வே நாட்டில் தேர்தல் நடைபெற்று 13 நாட்கள் ஆனநிலையில், அது தொடர்பில் அதன் அண்டை நாடுகளின் தலையீட்டின் முதல் நகர்த்தலாகும்.

நாட்டில் நடைபெற்ற அதிபர் தேர்தல்களின் முடிவுகளை அறிவிக்க வேண்டும் என அரசின் மீது அதன் அண்டை நாட்டுத் தலைவர்கள் அழுத்தும் கொடுக்கும் ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வைக்கும் முகமாக, சிம்பாப்வேயின் எதிர்க்கட்சித் தலைவரான மார்கன் ஸ்வாங்கிராய் தென் ஆபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

தென் ஆபிரிக்க தலைவர்களால் சனிக்கிழமையன்று நடாத்தப்படவுள்ள இந்த அவசரக் கூட்டத்தில் சிம்பாப்வே அதிபர் றொபேட் முகாபேயும் எதிர்க்கட்சித் தலைவர் மார்கன் ஸ்வங்கிராயும் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# முட்டையில் இருக்கும் கொழுப்புச் சத்து உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்

நடுத்தர வயதைத் தொட்டவர்கள் தினம் ஒரு முட்டை சாப்பிட்டால் அது அகால மரணத்தை ஏற்படுத்தும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முட்டையில் கொழுப்புச்சத்து அதிகம் உள்ளது. இதை அதிகம் தின்றால் இரத்தத்தில் கொழுப்பு அதிகரித்து அது உயிருக்கே ஆபத்தாக முடிந்து விடும் என்பது ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் பிர்ஹாம் என்ற இடத்தைச் சேர்ந்த லுக் டிஜோஸ், ஜெ.மிக்கேல் காஜியானோவ் ஆகிய ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆராய்ச்சியில் இந்த உண்மை தெரியவந்துள்ளது. இது அமெரிக்கன் ஜேர்னல் ஆப் கிளினிக்கல் நியூட்ரீஷியன் என்ற மருத்துவ இதழில் வெளியானது. இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து எத்தனை முட்டை சாப்பிடுவது உயிருக்கு பாதுகாப்பானது என்ற விவாதம் தொடங்கியுள்ளது. (அ-5)

# ஒரு அதிசய கமரா மனிதர்



(லண்டன்)

ஹெலிகாப் படரில் தேம்ஸ் நதியின் மீது ஒரு ரவுண்டு சுற் றிவிட்டு தரையி றங்குகிறார் ஸ் டீ பன் வில்ட் ஷைர். இறங்கியதும் ஓவியம் வரையத் துவங்குகிறார். ஐந்து நாளில் முழு ஓவியம் தயாராகிறது. ஒவ்வொரு கட்டடமும், அதன் அடுக்கு மாடிகளின் எண்ணிக் கை ஒன்று கூட குறையாமல், முக்கிய இடங்க ளும் அப்படியே அந்த ஓவியத்தில் பதிவுசெய் யப் பட்டுள்ளது.சிறு குறிப்போ,புகைப்பட உதவியோ இல்லாமல், முழுக்க முழுக்க தனது நினைவாற்றலால் படமாக வடிக்கிறார் ஸ்டீபன்.

இத்தனைக்கும் இவர் "ஆட்டிஸம்" என்ற , மூளை வளர்ச்சி குறைவு நோயால் பாதிக்கப்பட்டவர். ஸ்டீபனுக்கு மூன்று வயதான போது,அவருக்கு ஆட்டிஸம் என்ற மூளை வளர்ச்சி குறைவு நோய் கண்டுபிடிக்கப்பட்டது. அவரால் பேச முடியவில்லை. தான் நினைப்பதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த முடியாது. இவர் கோபப்படும்போது, ஒரு பேப்பரும், பென்சிலும் கொடுத்தால் சாந்தமாகி விடுவார். அதில் ஓவியம் வரைவார்.

கட்டடங்களின் வரைபடங்கள் தான் அவர் விரும்பி வரைவது. கோபப்படும் போதெல்லாம், அவரை சாந்தப்படுத்த அளிக்கப்பட்ட பேப்பர், பென்சில்கள் அவரை ஓவியராக மாற்றியது.ஆறாவது வயதில் ஒரு வணிக வளாகத்தை தத்ரூபமாக வரைந்தபோது, அதைப் பார்த்த குடும்ப நண்பர். "இந்தக் குழந்தையா இதை வரைந்தது..." என்று வியந்துபோனார். எட்டாவது வயதில்,தான் வரைந்த ஓவியத்தை முதல் முறையாக விற் பனை செய்தார் ஸ்டீபன். இப்போது அதுவே அவருக்கு தொழிலாகப் போய்விட்டது. கட்டடங் களை ஒருமுறை பார்த்தால் போதும்,அதை முழுமையாக மனதில் பதியவைத்து விடுவார். (அ-5)

# விபசாரத்துக்கு மறுத்த இளம்பெண்களை கொன்று புதைத்த கும்பலுக்குத் தண்டனை

(மொஸ்கோ)

ரஷ்யாவில் விபசாரத்துக்கு மறுத்த 30 இளம்பெண்களைக் கொன்று புதைத்த கும்பலுக்கு ஜெயில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் இருந்து 900 மைல் தொலைவில் நிகாலி தாகில் உள்ளது. இது காட்டுப்பகுதியாகும்.

எட்வர் சுதிநோவ் என்பவன் தலைமையில் செயல்பட்ட 7 பேர் கொண்ட கும்பல் அங்குள்ள இளம்பெண்களை ஆசைகாட்டி வசியம் செய்து விபசாரத்தில் ஈடுபடுத்தி வந்தனர். இதற்கு மறுக்கும் பெண்களைக் கொன்று அந்தக் காட்டுப் பகுதியில் புதைத்துள்ளனர்.

2002-05 காலகட்டத்தில் மட்டும் அவர்கள் விபசாரத்துக்கு மறுத்த 30 இளம் பெண்களைக் கொன்று புதைத்துள்ளனர்.இதுபற்றி தெரியவரவே பொலிஸார் அந்தக் கும்பலை கைது செய்தது. இதுவரை14 பெண்களின் உடல்களை பொலிஸார் தோண்டி எடுத்துள்ளனர்.

நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கு விசாரணையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. கும்பல் தலைவனான எட்வர் சுதிநோவுக்கு ஆயுள் தண்டனையும், அவனது தம்பி டிமாட்ரி சுதிநோவுக்கு 21 வருட தண்டனையும், மற்றவர்களுக்கு 10 வருட தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. (அ-5)

# சமூக சேவைகள் பிரிவில் வறிய மக்கள் பெறக்கூடிய நன்மைகள்

இலங்கையில் 1989ஆம் ஆண்டு முதல் பிரதேச செயலக நிர்வாக முறைநடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் பொதுமக்கள் தமது பிரதேச மட்டத்திலேயே பெரும்பாலான சேவைகளை பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

**சமூக சேவைகள் திணைக்களம் நலிவுற்ற சமூகத்திற்கு கைகொடுத்தல் என்ற குறிக்கோளுடன் இயங்கி வருகின்றது.** இத்திணைக்களம் தனது சேவைகளை மக்கள் எளிதாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் நாட்டில் உள்ள அனைத்து பிரதேச செயலகம், உதவி அரச அதிபர் அலுவலகம் தோறும் ஒரு சமூகசேவைகள் உத்தியோகத்தரை நியமித்துள்ளது. இவ் உத்தியோகத்தர் மூலம் வறிய மக்களுக்குப் பின்வரும் சேவைகளை வழங்கி வருகின்றது.

1. பொதுசன மாதாந்த உதவிப் பணம் ரூபா 100/- முதல் 300/- வரை குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கேற்ப இத் தொகை வழங்கப் படுகிறது.

விசேட தேவைக்குரியவர் (அங்கவீனர்) ஆதரவற்ற முதியோர், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பம், ஆதரவற்ற பிள்ளைகள் ஆகியோர் கிராமசேவகரிடம் உரிய படிவம் பெற்று பூரணப்படுத்தி, கோரிக்கைக் கடிதத்தைச் சமர்ப்பித்து விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

2. நோயாளர் உதவிக் கொடுப்பனவுகள்

புற்றுநோய், தொழுநோய், காசநோய், தலசீமியா போன்ற நோயாளிகள் மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பித்து உடன் பெறமுடியும்.

ரூபா 250 முதல் 500/- வரை இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

3. சுயதொழில் உதவித் தொகை.

பொதுசனமாதாந்த உதவிப் பணம் பெறுவோர் விசேட தேவைக் குரியோர் (அங்கவீனர்) ஆகியோரில் 18 வயது முதல் 59 வயது வரையிலானோர் ரூபா 15000/- தொகையை தொழில் உதவி நன்கொடையாகப் பெறமுடியும்.

4. தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு.

இயற்கை அனர்த்தம், எதிர்பாராத தீ விபத்து போன்றவற்றால் வீடு சேதமடையும் போது சேதத்தின் மதிப்பீட்டிற்கமைய உச்சத் தொகையாக ரூபா 20000/- வழங்கப்படும்.

5. விசேட தேவைக்குரியோருக்கான உபகரணங்கள், மருத்துவச் சான்றிதழ், கிராம சேவகரிடம் உறுதிப்படுத்திய கோரிக்கைக் கடிதம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து பின்வரும் உபகரணங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி, செயற்கைக் கால், மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் கருவி, வெள்ளைப் பிரம்பு, ஊன்று கோல்.

6. முதியோர் அடையாள அட்டை.

60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் யாவரும் வருமான வேறுபாடின்றி இதனைப் பெற முடியும். இதனை வைத்திருக்கும் ஒருவர் பின்வரும் சேவைகளில் முன்னுரிமை பெறத் தகுதியானவர்.

அரச வைத்தியசாலைகள், வங்கிச் சேவை, பொதுப் போக்கு வரத்துச் சேவை, நீதிச் சேவை, அரசாங்க அலுவலகங்கள், பொலிஸ் சேவை.

7. சுயதொழில் ஓய்வூதியம்.

சுயதொழில்களில் ஈடுபடும் 18 வயதின் மேல் 59 வயது வரையிலான ஒருவர் இத்திட்டத்தில் பணத்தைச் செலுத்திச் சேர்வதன் மூலம் ஓய்வூதியம், சமூக பாதுகாப்பு நன்மைகள், மரணப் பணிக்கொடை ஆகிய நன்மைகளைப் பெறலாம்.

8. வலிந்துதவும் சமூகசேவை அமைப்புக்களின் பதிவு, பிரதேச மட்டத்தில் வலிந்துதவும் சமூக சேவை அமைப்புக்களை உருவாக்கியோர் சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலர் சிபாரிசுடன் சமூகசேவைகள் பணிப்பாளரிடம் பதிவு செய்யலாம்.

9. முதியோர் இல்ல அனுமதி.

ஆதரவற்ற முதியவர் ஒருவர் கைதடியிலுள்ள அரச முதியோர் இல்ல அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும்.

10. முற்றிலும் காது கேளாத, வாய் பேசாத ஒருவர் மருத்துவ அத்தாட்சிப்பத்திரம், முத்திரை அளவு புகைப்படம், உரிய படிவம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும்.

கொழும்பிலுள்ள சமூக சேவைத் திணைக்களம் இவ் அடையாள அட்டையை விநியோகித்து வருகிறது.

11. ஊனமுற்றோருக்கான வீடமைப்புத்திட்டம். சொந்த காணியுள்ள ஊனமுற்ற ஒருவர் ரூபா 100000/- நன்கொடையாக ஊனமுற்றோருக்கான தேசிய செயலகம் மூலம் பெறமுடியும்.

12. விசேட தேவைக்குரியோர் (ஊனமுற்றோர்) தமக்குப் பொருத்தமான பயிற்சித் திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் பெற உதவி வழங்கப்படுகிறது.

மேற் கூறப்பட்ட உதவிகள் ஒவ்வொன்றையும் பெறுவதற்கு ஒருவர் தமது கோரிக்கைகளைக் குறித்துக் கடிதம் ஒன்றை எழுதி தமது பிரிவு கிராம சேவகரின் சிபாரிசைப் பெற வேண்டும். அத்துடன் உரிய படிவத்தை தமது கிராம சேவகரிடமோ அல்லது பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தரிடமோ பெற்றுப் பூரணப்படுத்தி கடிதத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வே. தபேந்திரன்**
சமூகசேவைகள் அலுவலர்
பிரதேச செயலகம்.

## சகல சிறுவர் போராளிகளையும் விடுதலை செய்ய வேண்டும் – அமெரிக்கா

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் உட்பட ஏனைய ஆயுதக்குழுக்களிடமுள்ள சகல சிறுவர் போராளிகளை விடுதலை செய்ய வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தம்மிடமிருந்த 11 சிறுவர் போராளிகளை விடுதலை செய்தமைக்கு பாராட்டுத் தெரிவித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக்கு பாராட்டுத் தெரிவித்த அமெரிக்கா, சிறுவர் போராளிகளை விடுவிப்பதற்கு மேலும் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

சிறுவர் போராளிகளாக செயலாற்றிய சிறுவர்களை சமூகத்தில் நற்பிரஜையாக மாற்றுவதற்கு பயிற்சி செயற்திட்டங்களை நடத்த வேண்டுமென அமெரிக்க தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வன்முறைகளை நிறுத்தி நீதியையும் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் கருணா குழுவினர் சிறுவர்களை விடுதலை செய்தமை நற் செயலாகுமென கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-6)

## உயர்தரக் கல்வியைத் தொடர மாற்றுப் பாடசாலைகள்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்திபெற்று உயர்தர கற்கை நெறிகளை தொடரமுடியாத பாடசாலைகளுக்கான மாற்றுப் பாடசாலைகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு முன்வந்துள்ளது.

இம்மாதம் 21ஆம் திகதி இது தொடர்பாக வெளியிடப்படவுள்ள சுற்றறிக்கையின் அடிப்படையில் மாணவர்கள் பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியுமென்றும் அமைச்சு கூறுகிறது. (அ-6)

## தங்கச்சங்கிலி கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நிறுவனத்தினரால் நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்தப்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் பங்கு பற்றியவர்களினால் மண்டபத்தினுள் தவறவிடப்பட்ட தங்கச்சங்கிலி ஒன்று அங்கு பணியாற்றும் மாநகரசபைப் பணியாளரினால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்,

தங்கச் சங்கிலியைத் தவறவிட்டவர் தகுந்த ஆதாரங்களை நேரில் சமர்ப்பித்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ். மாநகரசபை செயலாளர் இ. இரத்தின சிங்கம் அறிவித்துள்ளார். (ஓ)

## தமிழக எல்லைக்குள் ஊடுருவிய பத்து மீனவர்கள் சிறைபிடிப்பு

(சென்னை)

காசிமேடு துறைமுகத்தில் இருந்து கடந்த 2 நாட்களுக்கு முன்பு 50 விசைப்படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்க சென்றனர். அப்போது தமி ழக எல்லைக்குள் வந்து இலங்கை மீனவர்கள் மீன் பிடித்தனர்.

இதில் காசிமேடு இலங்கை மீனவர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது காசிமேடு மீனவர்களை தாக்கி வலை மற்றும் மீன்களை இலங்கை மீனவர்கள் பறித்து சென்றனர்.

இதையடுத்து காசிமேடு மீனவர்கள் கரை திரும்பி மேலும் பலரை அழைத்துக்கொண்டு கடலுக்கு சென்றனர். அப்போது தமிழக எல்லைக்குள் மீன் பிடித்துக்கொண்டிருந்த 10 இலங்கை மீனவர்களை அவர்கள் சிறை பிடித்தனர்.

பின்னர் அவர் களிடம் இருந்த 2 விசைப்படகுகளையும் சென்னைக்கு கொண்டுவந்தனர்.

தகவல் அறிந்தும் பொலிஸ் துணை ஆணையாளர் காமினி பொலிஸ் படையுடன் வந்து அவர்களிடம் விசாரணை நடத்தினார். அப்போது அவர்கள் அத்துமீறி தமிழக எல்லைக்குள் புகுந்தது தெரிய வந்தது.

இதையடுத்து இலங்கை மீனவர்கள் ரவீஸ், முத்து டிஸ்சால்சி பீட்டர் அனில்சாரோன் உட்பட 10 பேரை கைது செய்தனர். அவர்கள் கூறும் போது நாங்கள் தமிழக மீனவர்களை தாக்கவில்லை என்றனர்.

இது பற்றி சென்னை காஞ்சிபுரம் திருவள்ளூர் விசை படகுகள் சங்க செயலாளர் வேணுகோபால் கூறும் போது,

இலங்கை மீனவர்களால் மீனவர்களின் உயிருக்கு ஆபத்து உள்ளது. அவர்கள் அடிக்கடி நமது எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்துகிறார்கள் தமிழக கடலோர காவல் படையிலும் இது பற்றி பல தடவை புகார் கூறினோம் ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றார். (அ-5)

## கிராம சேவையாளர் ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம்?

கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்தமாத நடுப்பகுதியில் பூர்த்தி செய்யப்படும் என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 150 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற 2ஆயிரத்து 500 விண்ணப்பதாரிகளுக்கென பரீட்சைத்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப் படையில் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படஇருப்பதாக அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் அனுர பிரியபந்து தெரிவித்துள்ளார். (அ-6)

நாளை புத்தாண்டு தினத்தன்று (13.04.2008)
தேர் உலாவரும் யாழ். அத்தியடிப் பிள்ளையார்



வசந்த மண்டபப் பூசை காலை 8.15 மணி, எம்பெருமான் தேரில் எழுந்தருளல் காலை 9.00 மணி, தேரிலிருந்து இறங்கி ஆலயம் செல்லுதல் காலை 11.00 மணி.

இதனைத் தொடர்ந்து கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதானமும் நடைபெறும்.

*கோவில் நிர்வாகத்தினர்.*

தொலைபேசி:- 222 2140
0776013597

விளம்பர அனுசரணை:
மாங்கல்யா ஜுவல்ஸ்
தங்க, வைர நகை மாளிகை,
131 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/1000)

நன்றி நவில்கின்றேன்!



06.04.2008 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கொக்குவில் ஞானபண்டிதர் வித்தியாசாலை மண்டபத்தில் ஓய்வு பெற்ற தபால் அதிபர் சி.அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்ற பிரியாவிடை விழாவில் ஆசியுரை வழங்கியும் பாராட்டுரை வழங்கியும் விருதுகள் வழங்கியும் என்னைக் கௌரவித்த எனது பிரிவு மக்களுக்கும் ஏனைய அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு.விஜயரத்தினம்
கிராம அலுவலர் (முன்னாள்)
J/28, கொக்குவில் மத்தி/ மேற்கு.

(C/1087)

## விறுவிறுப்பான முதலாவது ஒருநாள் போட்டியில்

# இறுதிப்பந்தில் சந்தர்போல் சிக்ஸர்; மேற்கிந்தியத் தீவுகள் திரில் வெற்றி

(போட் ஒப் ஸ்பெயின்)

விறுவிறுப்பான முதலாவது ஒருநாள் போட்டியில் சந்தர்போல் இறுதிப் பந்தில் சிக்ஸர் அடித்து இலங்கை அணியை தோல்வியடையச் செய்தார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 டெஸ்ட், 3ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடிபுற 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் போட் ஒப் ஸ்பெயினில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் கிறிஸ் ஹைஹல் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

### ஆரம்பமே அதிர்ச்சி

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணி இரண்டாவது ஓவரில் இரண்டு ஓட்டங்களை மாத்திரம் எடுத்த நிலையில் அறிமுகத்துடுப்பாட்ட வீரரான உடவத்த ஓட்டமெதனையும் பெறாமல் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சங்கக்கார அதிரடியாக ஆடியபோதும் 23 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜெயவர்த்தனா களமிறங்க மறுமுனையில் உப்புல் தரங்க் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சாமரசில்வா களமிறங்கி நிதானமாக துடுப்பெடுத்தாட மறுமுனையில் ஜெயவர்த்தனா ஒரு ஓட்டத்தை மாத்திரம் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த டில்சான் இரண்டு ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணி 14.5 ஓவர்களில் 49 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

### சில்வா-கபுகெந்தார இணைந்தனர்

எனினும் 6-வது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த சாமரசில்வாவும் கபுகெந்தாரவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி இலங்கை அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

சிறப்பாக ஆடிய கபுகெந்தார 81-வது பந்தில் தனது 3-வது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் நிதானமாக துடுப்பெடுத்தாடிய சாமரசில்வாவும் 81-வது பந்தில் தனது 10-வது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இருவரும் இணைந்து 6-வது விக்கெட்டுக்காக 159 ஓட்டங்களை பகிர்ந்த நிலையில் நிதானமாக ஆடிய சாமரசில்வா (7பவுண்டரிகள் உட்பட) 67 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சமிந்தவாஸ் களமிறங்க மறுமுனையில் கபுகெந்தார அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.

### சதம் தவறியது

கபுகெந்தார 117 பந்துகளில் (7பவுண்டரிகள்,3சிக்ஸர்கள் உட்பட) 95 ஓட்டங்களை எடுத்தபோது துரதிர்ஷ்டவசமாக எட்வேட்ஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து 5 ஓட்டங்களால் சதம் அடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டார்.

கபுகெந்தார ஆட்டமிழக்கும்போது இலங்கை அணி 49.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 234 ஓட்டங்களை எடுத்திருந்தது.



வாஸின் இறுதிப் பந்தில் சிக்ஸர் அடித்து அணியை வெற்றி பெற வைத்த மகிழ்ச்சியில் சந்தர்போலையும்; நடுவர் அவரின் சிக்ஸருக்குரிய சமிக்ஞையை காட்டுவதையும் படத்தில் காணலாம்.

இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சமிந்தவாஸ் 10 ஓட்டங்களுடனும் குலசேகர ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பிராவோ 4 விக்கெட்டுக்களையும் எட்வேட்ஸ் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் ரெய்லர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

### சிறப்பான ஆரம்பம்

பதிலுக்கு 50 ஓவர்களில் 236 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அணித் தலைவர் ஹைஹல் மற்றும் சிமித் இணைந்து நிதானமாக ஆடி சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

எனினும் அணி 53 ஓட்டங்களை எடுத்தபோது சிமித்14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய சர்வான் சிறப்பாக துடுப்பெடுத்தாட மறுமுனையில் கிறிஸ் ஹைஹல் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார் எனினும் ஹைஹல் 52 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சாமுவேல்ஸ் களமிறங்க மறுமுனையில் சர்வான் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சந்தர்போல் களமிறங்க மறுமுனையில் சாமுவேல்ஸ் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியை தொடர்ந்து ஜோடிசேர்ந்த சந்தர்போல்; பிராவோ சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுத்தனர்.

### விக்கெட் சரிவு

எனினும் பிராவோ 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துக்களமிறங்கிய பிரவுன் (15),சாம்மி (01),ரெய்லர் (04) ஓட்டங்களுடனும் மற்றும் பென் ஓட்டமெதனையும் எடுக்காமலும் ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 48.5 ஓவர்களில் 219 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்களை இழக்க ஆட்டம் இலங்கை அணி வசம் மாறியது.

### கிளர்ந்தெழுந்தார் சந்தர்போல்

எனினும் 50-வது ஓவரில் ஒருவிக்கெட் மீதமுள்ள நிலையில் 13 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலைக்கு மேற்கிந்தியத் தீவ்கள் அணி தள்ளப்பட்டது.

இறுதி ஓவரை வீசுவதற்காக இலங்கை அணியின் அனுபவ ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸை அணித்தலைவர் மகேல ஜெயவர்த்தனா அழைத்தார்.

வாஸின் முதலாவது பந்தை எதிர்கொண்ட எட்வேட்ஸ் ஓட்டமெதனையும் எடுக்காமல் சொதப்பினார். இரண்டாவது பந்தை தடுத்தாடிய எட்வேட்ஸ் ஒரு ஓட்டத்தை எடுத்து சந்தர்போலை துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

எனினும் மூன்றாவது பந்துவீச்சில் சந்தர்போல் ஒரு ஓட்டத்தை மாத்திரம் எடுத்தார்.

வாஸின் 4-வது பந்தை எதிர்கொண்ட எட்வேட்ஸ் ஒரு ஓட்டத்தை எடுத்து மீண்டும் துடுப்பெடுத்தாட சந்தர்போலுக்கு வாய்ப்பளித்தார்.

49.4 ஓவர்களில் 226 ஓட்டங்களை எடுத்தநிலையில் மீதமுள்ள 2 பந்துகளில் பத்து ஓட்டங்களை பெறவேண்டிய கட்டாயத்தில் வாஸின் 5-வது பந்தை சந்தர்போல் எல்லைக் கோட்டுக்கு விரட்டி 4 ஓட்டங்களை எடுக்க ரசிகர்களை இருக்கையின் நுனிக்கே கொண்டு சென்றது.

இறுதிப்பந்தில் 6 ஓட்டங்களை எ்டுத்தால் மாத்திரம் வெற்றி என்ற இலக்குடன் வாஸின் 6-வது பந்தை எதிர்கொண்ட சந்தர்போல் தூக்கியடித்து சிக்ஸராக மாற்றி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

இதில் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 63 பந்துகளில் (5பவுண்டரி,ஒரு சிக்ஸர் உட்பட) 62 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணியின் அறிமுகப் பந்துவீச்சாளர் (இலங்கை இராணுவ வீரர்) மென்டிஸ் 3 விக்கெட்டுக்களையும் மற்றும் குலசேகர 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பந்துவீச்சில் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியும் துடுப்பாட்டத்தில் 36 ஓட்டங்களையும் எடுத்து வெற்றிக்கு வழிசமைத்த பிராவோ தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று போட் ஒப் ஸ்பெயினில் நடைபெறுகிறது.

(5)

# தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 265



விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் இஷாந் சர்மா

(கான்பூர்)

மூன்றாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் 265 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி மூன்றுபோட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது போட்டி சமநிலையில் முடிபுற்றதுடன் இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணிவெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற நிலையில் முன்னிலை வகிக்கின்றது.

தொடரின் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று கான்பூரில் ஆரம்பமானது. இப்போட்டியில் இந்திய அணியில் தலைவர் கும்ளே காயம் காரணமாக இடம் பெறாத நிலையில் அணித்தலைவராக தோனி செயற்படுவதுடன் பதிலாக சுழல் பந்துவீச்சாளர் பியூஸ் சாவ்லா இணைக்கப்பட்டுள்ளார்.

மற்றும் இரண்டாவது டெஸ்ட்டில் ஆடிய பதான், ஆர்.பி.சிங் நீக்கப்பட்டு யுவராஜ் சிங் மற்றும் இஷாந் சர்மா சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய போட்டியில் நாணயற்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் அதன்முதல் இன்னிங்ஸில் 265 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் அணித்தலைவர் சிமித் 69 ஓட்டங்களையும் அம்லா 51 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் இஷாந் சர்மா ,ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பியூஸ் சாவ்லா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் யுவராஜ் சிங்,சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



பந்தை விளாசும் சிமித்

நேற்றைய முதல் நாள் ஆட்டம்முடிபடைந்த நிலையில் இரண்டாம் நாளான இன்று இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பிக்கும். (5)

# பாதீனியம் களையைக் கட்டுப்படுத்துவோம்!

யாழ்.மாவட்டத்தில் பாதீனியம் களையானது 2000ஆண்டில் ஆரம்பத்தில் 46 ஹெக்ரயர் நிலப்பரப்பில் பரவியிருப்பது அவதானிக்கப்பட்டது. இக் களை படிப்படியாக பெருகி தற்போது 76.25 ஹெக்ரயர் நிலப்பரப்பினை ஆக்கிரமித்துள்ளது.

இக் களையானது யாழ்.மாவட்டத்தில் பரவியுள்ள இடங்கள் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகவும் விஸ்தீரணமும் பின்வருமாறு,

| பிரதேச செயலர் பிரிவு | விஸ்தீரணம் |
|---|---|
| உடுவில் | 8.5 |
| தெல்லிப்பளை | 7.75 |
| சங்கானை | 4.0 |
| கரவெட்டி | 5.25 |
| நல்லூர் | 0.50 |
| யாழ்ப்பாணம் | 0.50 |
| கோப்பாய் | 49.25 |
| பருத்தித்துறை | 0.50 |
| மொத்தம் | 76.25 |

பாதீனியம் ஹிஸ்டோபோரஸ் எல் என்னும் இக் களை ஓர் ஆக்கிரமிப்புக் களையாக கருதப்பட்டு 1999ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க தாவரப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் இலங்கையில் இக்களை பரவாமல் தடுப்பதற்கும் அதனை அழிப்பதற்குமான ஒழுங்கு விதிகள் 2000-12-20இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானி இலக்கம் 1163/23 இல் கௌரவ விவசாய அமைச்சர் டி.எம்.ஜயரத்தின அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கு விதி 1:2 இல் இக் களை காணப்படும் நிலத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இக் களை காணப்படுவதாக விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு அல் லது அப்பிரதேச செயலாளருக்கு உடனடியாக எழுத்து மூலம் அறிவிக்கவேண்டும் எனவும், இக் களை தமது நிலத்தில் அல்லது குடியிருக்கும் நிலத்தில் காணப்படுவதாக சந்தேகப்படாது இருப்பதற்கான தகுந்த காரணத்தை உறுதியசெய்யாதபோது அவர் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்தவர்களாக் கருதப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒழுங்கு விதி1:5:1 இல் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தவறிழைக்கும் எந்த ஒரு நபரும் நீதிவான் முன்னிலையில் குற்றம் செய்தவராக நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 1 மாதத்திற்கு குறையாததும் 6 மாதத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது 10ஆயிரம் ரூபாவிற்குக் குறையாததும் அல்லது 1 இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத தண்டப்பணம் அறவிடப்படும். அல்லது இவை இரண்டு தண்டனையும் விதிக்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒழுங்குவிதி 1:14 இல் இவ் விதிகளை அமுல் செய்வதற்கு விவசாயப் பணிப்பாளர் நாயகம் பின்வரும் திணைக்களங்களில் இருந்து அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் களை நியமனம் செய்வார் என்றும் அவர்களுக்கு இது தொடர்பான அதிகாரமளிக்கும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.கல்வித் திணைக்களம்
2.விவசாயத் திணைக்களம்
3.கமநல சேவைகள் திணைக்களம்
4.புகையிரத திணைக்களம்
5.பிரதேச செயலாளர்கள்
6.மாநகர சபைகள்
7.மகாவலி அதிகார சபை
8.வீதி அபிவிருத்தி அதிகார சபை
9.நீர்ப்பாசனத் திணைக்களம்
10.சுகாதாரத் திணைக்களம்
11.கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
12.கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

பாதீனியத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் விவசாயத்திணைக்களம் கட்டுப்படுத்தல் சம்பந்தமான தொழில்நுட்பத்தை சம்பந்தப்பட்ட விவசாயிகள், மற்றைய பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி கருத்தரங்குகள், சிரமதானம், பத்திரிகைச் செய்திகள் என்பவற்றின் மூலம் பரப்பி வருகின்றது. பிரதேச சபைகளும் பாதீனியம் களையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்டுப்படுத்தி வருகின்றது.

வீட்டின் சுற்றாடலில் காணப்படும் பாதீனியம்



**இக் களையினால் ஏற்படும் பாதிப்புகள்**

☼ உங்கள் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

☼ விளைவில் 30%, 40% வீழ்ச்சி ஏற்படும்.

☼ மனிதனின் தோலில் பட்டால் ஒவ்வாமை ஏற்படும்.

☼ கால்நடைகள் உண்டால் நோய்கள் ஏற்படலாம்.

☼ இவற்றின் மகரந்த மணிகள் நீங்கள் செய்கை பண்ணும் பயிர்களின் குறிகளில் விழுந்தால் கருக்கட்டல் தடைப்படும்.

**பாதீனியத்தை இனங்காணல்**

☼ இது எஸ்டரேசியே குடும்பத்தைச் சேர்ந்த ஓராண்டுக் களையாகும்

☼ 50-150 செ.மீ. உயரம் வரை வளரக் கூடியது.

☼ இலைகள் செவ்வந்திப் பூச்செடியின் இலை அமைப்பை ஒத்தவை.

☼ 4-5 வாரத்தில் முனை அரும்பில் சிறிய வெண்ணிற பூக்கள் தோன்றும்

☼ நன்கு வளர்ந்த தாவரம் ஒன்று பல்லாயிரக்கணக்கில் விதைகளை உற்பத்தி செய்யும்

☼ இவ் விதைகள் பல ஆண் டுகளுக்கு பின்னும், முளைக் கும் ஆற்றல் கொண்டவை.

**கட்டுப்படுத்துவதற்குரிய வழிமுறைகள்**

☼ இக்களை உள்ள இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மண் எடுத்துச் செல்லாதீர்கள்.

☼ பூக்கள் உள்ள பகுதி களை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லாதீர்கள்

☼ பூக்கள் உருவாகும் முன்னரே கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

**பூக்கள் உருவாகும் முன் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள்**

☼ கையுறைகளை அணிந்து களைகளை பிடுங்கி காயவிட்டு எரியுங்கள் அல்லது மண் வெட்டியால் கொத்தி காயவிட்டு எரியுங்கள்.

☼ கிளை போசேற் அல்லது 2.4D களை நாசினிகளில் ஒன்றை விசிறிக் கட்டுப்படுத்துங்கள்.

☼ கிளைபோசேற் 100மில்லி லீற்றர் 13.5லீற்றர் நீர் கொள்ளும் தாங்கிக்கு அல்லது 120மில்லி லீற்றர் 16லீற்றர் நீர் கொள்ளும் தாங்கிக்கு

☼ 2.4D 40மில்லிலீற்றர் 13.5 லீற்றர் நீர் கொள்ளும் தாங்கிக்கு 50 மில்லி லீற்றர் 16 லீற்றர் நீர்கொள்ளும் தாங்கிக்கு

பயிர் செய்யும் நிலத்தில் பாதீனியம்



**பூக்கள் உருவாகிய பின்னர் கடைப்பிடிக்கவேண்டிய முறைகள்**

☼ மண்வெட்டியால் கொத்தி எரியுங்கள்

☼ கையுறைகளை அணிந்து களையைப் பிடுங்கி காயவிட்டு எரியுங்கள்

☼ தாவரத்தின் பூக்கள் உள்ள பகுதியைப் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இக் களை பூத்து முதிர்வடைந்த பின் களை நாசினிப் பாவனை வெற்றியளிக்காது என்பதால் பிடுங்கிக் காயவைத்து எரிப்பதே மிகவும் சிறந்ததாகும்.

**க.தனபாலசிங்கம்**
பாடவிதான உத்தியோகத்தர்
(பயிர் பாதுகாப்பு)
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம்.

**பின்வருவன பாதீனியத்தை வினைத்திறனாக கட்டுப்படுத்துவதற்கான தீர்வுகளாக அமையும்**

☼ வீடுகள் அமைந்துள்ள காணிகள் மற்றும் சுற்றாடலில் உள்ள பாதீனியம் களைகளை அவற்றின் உரிமையாளர்களே கட்டுப்படுத்தல்.

☼ தோட்டங்களிலும், பயிர்களிடையேயும், சுற்றாடலில் உள்ள பாதீனியம் களைகளை தோட்டங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளே கட்டுப்படுத்த நடவடிககைகளை மேற்கொள்ளல்.

☼ பொது இடங்களில் உள்ள பாதீனியம் களைகளை அப்பிரதேச கிராமமட்ட அமைப்புக்களுடன் பொதுமக்களும் ஒன்றிணைந்து கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.

# சோமவன்சவா? வீரவன்சவா துரோகி என்பது எதிர்காலத்தில் மக்களுக்கு தெரியவரும்

(கொழும்பு)

இலங்கையில் முன்னணி அமைத்த அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் இறுதி யில் ''விலாசம்'' இல்லாது சிதறிப் போனதே வரலாறு ஆகும். அதுவே இன்று ஜே.வி.பிக்கும் நிகழ்ந்துள்ளது. சோமவன்சவா? வீரவன்சவா துரோகி என்பது எதிர்காலத்தில் மக்களுக்கு தெரியவரும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி.தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஜே.வி.பி. யின் பிரிவினைக்கு ஐ.தே.கவே காரணம் என்று கூறப்படுகிறதே? இது உண்மையா என்று கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஜே.வி.பியை பிரிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இலங்கையில் அரசியல் கட்சிகளை பிரித்து சின்னாபின்னமாக்கும் நடவடிக்கைகள் ஜனாதிபதியின் தலைமையிலேயே இடம் பெற்று வருகின்றன. இது கட்சி அரசியலுக்கு ஏற்பட்டுள்ள சாபமாகும். ஆரம்பத்தில் ஐ.தே.கவுக்குள் பிரிவினை ஏற்படுத்தப்பட்டது. தற்போது ஜே.வி.பிக்குள் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எமது கட்சியிலிருந்து வெளியேறியவர்களை நாம் அச்சுறுத்தவோ அவர்களது வாகனங்களை பறிக்கவோ இல்லை. இன்று அமைச்சர்களாக அவர்கள் இருக்கின்றனர். ஆனால் ஜே.வி.பியிலிருந்து வெளியேறியவர்கள் மிரட்டப்படுகின்றார்கள். அவர்களது வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இதுதான் ஜே.வி.பி. வலியுறுத்தும் ஜனநாயகமாகும். ஜே.வி.பி. இடதுசாரி கட்சியல்ல, சிறிய முதலாளித்துவக் கட்சியென்பது தற்போது தோலுரித்து காட்டப்பட்டுள்ளது.

சோமவன்ச, வீரவன்சவை துரோகியென்கிறார். வீரவன்ச, சோமவன்சவை துரோகியெனக் குற்றம்சாட்டுகிறார். உண்மையில் யார் துரோகியென்பது மக்களுக்கு தெரியவரும். ஐ.தே.கவுக்கு ஜே.வி.பியை பிரிக்க வேண்டுமென்ற தேவை கிடையாது. பாராளுமன்றத்தில் 5அல்லது 6 எம்.பி.மாரே ஜே.வி.பி.க்கு இருந்திருக்க வேண்டும். அத்தொகை 39 ஆக அதிகரித்ததன் காரணமாகவே இன்றைய நிலை ஏற்பட்டது. (அ-5)

# பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைக்குழு உறுப்பினர் தெரிவு

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 25 கிளைக்குழுக்களுக்குமான கிளைக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு கிளைக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு, கோரமின்மையால் இடம்பெறவில்லை என்றும் அக் கிளைக்கான கிளைக் குழு உறுப்பினர்கள் வெகு விரைவில் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தெரிவு முடிவுற்றதும் இக் கிளைகளுக்கான தலைவர், செயலாளர், பேராளர்கள் தெரிவுக் கூட்டம் நடைபெறவுள்ளது. (அ-52)

திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது அழகியல் கல்லூரி
நடத்தும்
சிறுவர் சித்திரம், அழகியல் கண்காட்சி
காலம் : 13,14 -04-2008 (ஞாயிறு,திங்கள்)
நேரம் : மு.ப.10.00 மணி -பி.ப 4.00 மணி வரை
இடம் : கலைக்கோட்டம், 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
அனுமதி இலவசம்
அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.
128, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-222 9419
கலைத்தூது அழகியல் கல்லூரி
திருமறைக் கலாமன்றம்
(C/1001)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
திருமறைக் கலாமன்றம்
நடத்தும்
கலைநிகழ்ச்சிகள்
காலம் : 13-04-2008 ஞாயிற்றுக்கிழமை (நாளை)
நேரம் : பி.ப 4.30 மணி
இடம் : திருமறைக்கலாமன்ற அரங்கு
கலைநிகழ்வுகளாக
வசந்தன் ஆட்டம், 'ஏகலைவன்', நாட்டுக்கூத்து
மௌன நாடகம், நடனங்கள் இடம்பெறும்.
அனுமதி இலவசம்
அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி:-222 2393
திருமறைக் கலாமன்றம்
(C/1002)

எந்தக் காலத்திலும் புயற்காற்றினாலும் பூமி அதிர்ச்சியினாலும் அழிந்ததை விட வீடுகளும் நகரங்களும் மனிதர்களின் கையினாலேயே அதிக நாசமடைந்திருக்கின்றன, —ஆவ்பரி

வலம்புரி

# அங்கே ஆயுதக் கொள்வனவு இங்கே உணவுப் பஞ்சம்

இலங்கை பத்தாயிரம் ஏவுகணைகளை ஸ்லோவோக்கியாவிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது.

பத்தாயிரம் ஏவுகணைகளை கொள்வனவு செய்ததன் மூலம் பிறக்கின்ற புத்தாண்டில் ஏவுகணை யுத்தமே இடம்பெறும் என்பதை உணர முடியும்.

உலக நாடுகள் சமாதானத்தின் வழியில் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காணுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்துவருகின்ற போதிலும், அதனை ஒட்டுமொத்தமாக புறக்கணித்துவிட்டு பத்தாயிரம் ஏவுகணைகளை கொள்வனவு செய்வதில் அரசு தீவிரம் காட்டி வருகின்றது.

இவ்விதம் ஆயுதக் கொள்வனவைச் செய்வதானது யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்துவதற்கென்பதை உலக நாடுகள் உணர்ந்து கொள்ள முடியும்.

அதாவது தமிழர் பகுதியில் அடுத்து வரும் மாதங்களில் யுத்தம் மிகத் தீவிரமடையும், இதன் போது ஏகப்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்படும் சந்தர்ப்பமும், அவர்களின் சொத்துக்கள் அழிந்து போகும் சந்தர்ப்பமும் நிறையவே உண்டு.

இவ்வாறு அரசு, தமிழர் பகுதியில் நடத்தும் இனப்போரில் அழிந்துபோன மனித உயிர்கள், சொத்துக்கள் ஏராளமாக இருந்தும் மென்மேலும் அதனை அதிகரிக்கும் விடயத்தில் அரசு கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

இந்தக் கொடூரத்தை தடுத்து நிறுத்த எவருமே இல்லை என்ற பரிதாப நிலையில்,மேலும் பத்தாயிரம் ஏவுகணைகளைத் தாங்க தமிழர் தாயகம் தயாராகவேண்டிய நிலையில் உள்ளது.

உள்நாட்டில் நடக்கும் இந்தக் கொடூரத்தின் கோரத் தாண்டவம் ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் வடக்கு கிழக்கில் நிலவும் உணவுத்தட்டுப்பாடு, விலையேற்றம், பஞ்சம், பட்டினி, வறுமை என்பன தலைவிரித்தாடுகின்றன.

தமிழர் பகுதியில் உணவுத்தட்டுப்பாடும், பட்டினியும் ஏற்படும் அபாயம் உண்டென ஐ.நா.சபை எச்சரிக்கை செய்யும் வகையில் அறிக்கையை வெளியிட்டுவிட்டு தன் கடமை முடிந்துவிட்டதாக மௌனமாக உள்ளது.

ஐ.நா.சபை கூட இலங்கை விடயத்தில் தனது கடமையை, பொறுப்பை மறந்து அல்லது மறைத்துச் செயற்படுகின்றதென கூறும் அளவிற்கு நிலைமை உள்ளது.

ஒட்டுமொத்தத்தில் இலங்கைத் தமிழர்களை அழிப்பதற்கு பத்தாயிரம் ஏவுகணைகளை கொள்வனவு செய்யும் அரசு மறுபுறத்தில் தமிழ் மக்களை பட்டினிபோட்டு சாகடிக்கும் பணியையும் சமாந்தரமாகச் செய்கின்றது.

இந்த அநீதியை, சிறுபான்மை இனத்திற்கு இழைக்கப்படும் துரோகத்தை தடுத்து நிறுத்த ஆண்டவன்தான் முன்வரவேண்டும்.

# நல்லை ஆதீன முதலாவது குரு மகா சந்நிதானம்

## கதாப் பிரசங்கத்தினால் சைவம் வளர்த்த நல்லைக் குருமணியின் குருபூசை இன்று

சைவமும் தமிழும் இன்று தழைத்தோங்கி நிற்கத் தன்னையே முற்று முழுதாக அர்ப்பணித்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் 27ஆவது குருபூசை இன்றாகும். யாழ்ப்பாணத்தில் சைவப் பாரம்பரியம், சைவக் கோட்பாடுகள் இன்றும் நிலைத்திருக்க காரணகர்த்தாவாக விளங்கிய சுவாமிகள் ஈழநாட்டிலே ஓர் ஆதீனம் அமைக்க வேண்டுமென்ற மேலான குறிக்கோளோடு செயற்பட்டு 1966இல் நல்லூரில் திருஞானசம்பந்தர் ஆதீனம் என்ற பெயரில் ஓர் உயரிய நிலையத்தை ஸ்தாபித்தார்.



அவருடைய உயர்ந்த நோக்கம் இன்று யாழ்.மக்களுக்கு சைவசமய வரப்பிரசாதமாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது நல்லை ஆதீனம். சைவத்தின் மேன்மையையும் தொன்மையையும் மக்கள் மத்தியில் தெரியப்படுத்துவதற்காக கதாப்பிரசங்கம் செய்வதையே தமது பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர் சுவாமிகள்.

எங்கெல்லாம் சைவ விழாக்களும் சமய வைபவங்களும் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் இவரது கதாப்பிரசங்கம் இருக்கும். தமது கணீரென்ற குரலினாலே மக்களைத் தன்பால் ஈர்த்தவர் சுவாமிகள்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களைப் போன்ற உருவ ஒற்றுமையுடைய சுவாமிகள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் மூலமாகப் பல பணிகள் செய்துள்ளார். பண்ணிசை வகுப்புக்கள் பாலர் வகுப்புகள், வயலின், மிருதங்கம் பயிலும் வகுப்புகள், வாய்ப்பாட்டு பண்டித வகுப்புகள், புராண படனங்கள் என்று இன்னோரென்ன சேவை செய்த சுவாமிகள் இலங்கையில் மட்டுமல்ல இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் முதலான நாடுகளுக்கும் சென்று கதாப் பிரசங்கம் செய்து சைவம் வளரப் பாடுபட்டுள்ளார்.

சமயதீட்சை பெற்றால் தான் உண்மைச் சைவர்களாக முடியும் என்று பிரசங்கத்தில் கூறும் இவர் பல இடங்களில் சைவ சமயதீட்சைவைத்து சைவமக்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டார்.

நெற்றியில் திருநீறு துலங்கினால்த் தான் சைவ சமயத்தவர் என்று வெளிப்படையாகத்தெரியும் என்றும் கட்டாயம் ஒவ்வொரு சைவ மக்களும் சைவசமய தீட்சை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அன்புக்கட்டளையிட்டு வலியுறுத்தி வந்த இவர் 10.4.1981இல் இவ்வுலக வாழ்வை நீத்தி சமாதிநிலையை அடைந்தார்.

இன்று நாங்கள் அன்னாரது குரு பூசையை கொண்டாடினால் மட்டும் போதாது அவர் நற்சிந்தனைகளைக் கேட்டு நமது வாழ்க்கையை நேர்வழியில் செலுத்தி சகல சௌபாக்கியங்களுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை அவன் அருளிலே அவன்தாள் வணங்கி உய்தி பெறுவோமாக.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்
நாச்சிமார் கோயிலடி.

# இலவச சுகாதார சேவை வழங்கும் ஒரே நாடாக இலங்கை திகழ்கிறது

(கொழும்பு)

உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசிய பிராந்தியத்திற்கான பிரதிநிதி டொக்டர் ஷாம்லி பிளேயன் பான்பாங் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவை சுகாதார அமைச்சில் நேற்று காலை சந்தித்தார். இதன் போது இலங்கையின் சுகாதார திட்டங்களுக்கென உலக சுகாதார அமைப்பினால் எதிர்காலத்தில் வழங்கப்படக்கூடிய உதவிகள் குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டது. தென்கிழக்காசிய பிராந்திய பிரதிநிதியும் உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக்கான வதி-விடப்பிரதிநிதியுமான டொக்டர் அகஸ்டின் ஒபேராவும் இதில் கலந்து கொண்டார்.

கடந்த 5 வருடகாலத்தில் இலங்கையின் சுகாதாரத்துறையில் எய்தப்பட்ட முன்னேற்றம் குறித்தும் உலக சுகாதார நிறுவனம் கவனத்தில் கொண்டுள்ளதையும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. உலகின் பல நாடுகளிலும் பரவிய பறவைக்காய்ச்சல் நோயின் தாக்கம் இலங்கையில் ஏற்படாது தடுப்பதில் இலங்கை பெரு வெற்றி கண்டுள்ளது. அத்துடன் (HIV) எயிட்ஸ் தொற்றும் கூட நாட்டின் தொற்று மட்டத்தில் இல்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகிலேயே இலவச சுகாதார சேவைகளை வழங்கும் ஒரே நாடாக இலங்கை திகழ்வதை சுகாதார அமைச்சர் அங்கே சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த 3 தசாப்த காலமாக நாடு யுத்த சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ள போதிலும் சுகாதார துறைக்கான நிதி எவ்வித காரணத்தினாலும் நிறுத்தப்படவில்லை என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் சுகாதார துறைசார் நிபுணர்களுக்கு அரச செலவில் இலவசப் பயிற்சிகள் வழங்கப்பட்டு அதன் பின்னர் அவர்களுக்கு கட்டாயம் அரசுத்தொழில்கள் வழங்கும் ஒரே ஒரு நாடாக இலங்கை இருந்து வருவதையிட்டு பெருமிதம் கொள்வதாகவும் அமைச்சர் அங்கு சுட்டிக்காட்டினார். உலகிலேயே பிறப்பு விகிதம் மற்றும் தாய்சேய் இறப்பு விகிதம் என்பன குறைவாகக் காணப்படுவதில் இலங்கை முதலிடத்தில் உள்ளதையும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (அ-6)

# உலக சுகாதார நிறுவனத்தின் தலைமைப்பதவி இலங்கைக்கு?

(கொழும்பு)

உலக சுகாதார நிறுவனத்தின் தலைமைப்பதவிக்கான தேர்தல் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ள உலக சுகாதார நிறுவனத்தின் தலைமையகத்தில் அடுத்தமாதம் நடைபெறவுள்ளது.

இதன்போது உலக சுகாதார அமைப்பின் தலைமைப்பதவிக்கு இலங்கை தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் பெருமளவு தென்படுவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதற்கான தலைமைத்துவம் இலங்கைக்கு கிடைக்கும் என்பதை இவ் வமைப்பின் அங்கத்துவ நாடுகள் பல நம்பிக்கை வெளியிட்டுள்ளன. உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசிய பிராந்தியத்திற்கான பிரதிநிதி டொக்டர் ஷாம்லி பிளேயன் பான்பாங் சுகாதார அமைச்சரை நேற்று சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

ஓலைச் சுவடிகள் 12

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

## நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

*பெற்றோர்களை தினமும் கால்தொட்டு வணங்க வேண்டுமா?*


தாய்தந்தையரையும் குருவையும் தினசரிக் கடமையாக கால்தொட்டு வணங்க வேண்டும் என்பது நம்முன்னோர்கள் வகுத்திருந்த விதி.

தாய் தந்தையருக்கும் குருவுக்கும் ஓர் மலர்ந்த புன்னகை கூட வழங்காத இத்தலை முறையினருக்கு இந்த விதி ஓர் பழைய ஏற்பாடு, குருபக்தி அழிந்துவரும் இந்தத் தலைமுறைகளை வார்த்தெடுக்க இயலும் என்று நம்பிக்கை தரும் சில ஆசாரியர்களின் மூதுரைகளும் உள்ளன.

மதிப்பைத் தெரிவிக்கும் நான்கு ஆசாரங்களை நாம் கண்டு வருகின்றோம். அதில் முதலாவதானது 'வணக்கம்' என்று கூறுவது. இரண்டாவது பெரியோர்களைக்கண்டால் எழுந்து நிற்பது. மூன்றாவது கால் தொட்டு வணங்குவது. இறுதியானது சாஷ்டாங்க வணக்கம்.

தினமும் காலையில் பெரியவர்களின் கால் தொட்டு வணங்குவதனால் அவர்களுடைய ஆசீர்வாதம் பெறலாம் என்று நம் விசுவாசப் பிரமாணங்கள் கூறுகின்றன. அவர்கள் நமக்குச் செய்த சேவைகளை நினைத்துத்தான் நாம் கால் தொட்டு வணங்குகின்றோம். பதிலாக அவர்கள் ஆசியையும் பெறுகின்றோம். யோகாப்பியாசத்தை சிறந்த ஓர் உடற்பயிற்சியாகக் கண்டறிந்து வரும் இந்த நவீன காலத்தில் கால்தொட்டு வணங்குதல்; சாஷ்டாங்க வந்தனம் என்பவை மிக முக்கியமான யோகா முறைகள். ஆதலால் இதை சிறந்த உடற்பயிற்சியாகவும் கொள்ளலாம்.

பெற்றோர்களை வணங்குதல் குடும்பத்தில் ஒற்றுமையுண்டாக்கும். பாசமும் நெருங்கிய உறவும் உறுதிப்படுகின்றன. இத்துடன் வீட்டில் நிலவும் நிம்மதியின்மையும் போய்விடும் என்ற நம்பிக்கையுமுண்டு.




**சீனாவுக்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் மற்றும் சீன ஜனாதிபதி ஜின்டாவோ ஆகியோருடன் சந்திப்பினை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.**

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கற்கோவளம் அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய மகா கும்பாபிஷேகம் இம் மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபைச் செயலாளர் சதா.கேசவானந்தன் அறிவித்துள்ளார். (ச-52)

## கைதடி...

சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நீர்வேலியில் நேற்று நண்பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிறுபிட்டியைச்சேர்ந்த குணசிங்கம் சுரேஸ்குமார் (வயது 27) என்ற தச்சுத் தொழிலாளியே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.பி.ரணவீர தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் பதில்நீதிவான் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இரு சடலங்களும் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-2,4,5)

## அச்சுறுத்...

தெரிவித்தனர். இதனால் ஜே. வி.பி. இரண்டாகப் பிளவுபட்டது. இந் நிலையில் ஜே.வி.பியின் அதிருப்திக் குழுவினரின் வாகனங்களை அடையாளம் தெரியாத குழுவினர் நேற்று முன்தினம் கொள்ளையடித்துச் சென்றனர்.

மேலும் விமல் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத்துக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. தற்போது விமல் வீரவன்சவுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் அவரை தலைமறைவாகச் செல்லுமாறு அவரது ஆதரவாளர்கள் வலியுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை தனது வீட்டை விட்டு வெளியேறிய விமல் வீரவன்ச தலைமறைவாகியுள்ளார். (எ-5)

## பெண் கரும்புலிகள் பற்றிய ஆவணப்பட தயாரிப்பாளருக்குக் கொலை மிரட்டல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இரண்டு பெண் கரும்புலிகள் பற்றிய ஆவணப்படத்தின் தயாரிப்பாளருக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் துர்காமில் நடைபெறும் ஆவணப் பட விழாவில்-மை டோட்டர் த ரெரறிஸ்ட்-என்ற இரு பெண் கரும்புலிகள் ஆவணப்படத்தின் இயக்குநருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக நோர்வே நாளிதழ் தெரிவித்துள்ளது.

புகழ்ச்சுடர் மற்றும் தர்ஷினி ஆகிய இரு பெண் கரும்புலிகளின் நாளாந்த வாழ்க்கையையும் மன உணர்வுகளையும் தர்ஷினியின் தாயார் குறித்தும் சித்திரிக்கக் கூடிய ஒரு ஆவணப் படம் இது.

நோர்வே நாட்டின் கருத்துச் சுதந்திரத்திற்கான அமைப்பின் ஆதரவுடன் இந்த ஆவணப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கைக்குச் சென்றிருந்த ஆவணப்படத்தின் இயக்குநர் பேத்தே ஆனெஸ்தாத் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி தமிழீழ விடுதலைப்புலிகளின் பகுதிக்குச் சென்றதாக அண்மையில் அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருந்தது.

ஆனால் கருத்துச் சுதந்திரத்தை மதிக்காத அரசாங்கத்திடம் கேட்க வேண்டிய தேவையில்லை என்றும் அதேநேரத்தில் நோர்வேத் தூதரகம் எமக்கு அனுமதியளித்திருந்தது என்றும் இயக்குநர் மேலும் கூறியுள்ளார். (ச)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 6 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக 6 வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் இலங்கை வந்துள்ளனர் பவ்ரல் எனப்படும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு இவர்களைத் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தவுள்ளது.

அடுத்த மாதம் 10ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு 3 மாவட்டங்களிலும் அமைக்கப்படவுள்ள ஆயிரத்து 22 வாக்குச் சாவடிகளில் 2 ஆயிரத்து 500 உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை நடைபெற்று முடிந்த மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது இடம்பெற்ற தேர்தல் வன்முறைகள் மற்றும் வாக்கு மோசடிகளை மூடிமறைத்து அரசாங்கத்திற்குச் சார்பாக பவ்ரல் அமைப்பு அறிக்கை வெளியிட்டமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல்வேறு அரசியல் கட்சிகள் குற்றஞ்சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வன்னிக் களமுனையில் சரத் பொன்சேகா

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீண்டும் கடந்த வியாழக்கிழமை காலை வன்னிக்கள முனைக்கு சென்றுள்ளார்.

வன்னி படைத்தளபதி ஜகத் ஜெயசூர்ய மற்றும் மூத்த படைத்தளபதிகளுடன் சரத் பொன்சேகா களநிலைமைகள் தொடர்பாக ஆலோசனை நடத்தியுள்ளார். (ச-5)

## சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத்துறைக்கான பதில் அமைச்சராக ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட உத்தியோகபூர்வமான விஜயமொன்றினை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளார்.

அவர் மீண்டும் நாடும் திரும்பும் வரையில் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன சுற்றுலாத்துறை பதில் அமைச்சராகச் செயற்படுவாரென அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் அனுஷ பல்பிட்ட தெரிவித்தார். (ச)

## இலங்கை...

தந்தையாவார்.

இவர் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளால் விமானப் படையின் அவ்ரோ விமானம் 24 மணிநேரத்தில் அடுத்தடுத்து சுட்டுவீழ்த்தப்பட்டதில் ஒரு விமானத்தின் விமானியாக இருந்து கொல்லப்பட்ட கப்டன் சிராந்த குணதிலக்கவின் தந்தையுமாவார்.

அரசின் போர் நடவடிக்கைகள் தொடர்பில் இவர் கடந்த காலங்களில் கடுமையான கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனைகளை...

புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்படுகின்ற பிரசித்தமான நிகழ்வுகளில் பங்குபற்றும்போது பாதுகாப்பு ஆலோசனைகளை அவ்வாறே கடைப்பிடிப்பதுடன் குறிப்பாக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் பயணம் தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட ஏற்பாடுகளை மீறிச் செயற்பட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனைகளைக் கவனத்தில் கொள்ளாது செயற்படுவது பயங்கரவாதிகளுக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கையாகும். பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்ற நிலையில் பயங்கரவாதிகளுக்குச் சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் செயற்பட வேண்டாம் எனவும் அரச தரப்பு முக்கியஸ்தர்களிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் சீனாவுக்கு விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் ஜனாதிபதி தலைமையில் ஆளுந்தரப்பு நாடாளுமன்றக் குழு மற்றும் அரச தரப்பு முக்கியஸ்தர்களுடன் அலரி மாளிகையில் நடத்திய சந்திப்பு ஒன்றின்போதே இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

நாட்டினதும் அரசியல் தலைவர்களினதும் மற்றும் மக்களினதும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பாதுகாப்புத் தரப்பினரால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பதுடன் பாதுகாப்புத் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமாக பயங்கரவாதிகளின் நோக்கத்துக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

இதேவேளை சிங்கள - தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்துள்ளது.

குறிப்பாக தலைநகரம் உள்ளிட்ட பிரதான நகரங்கள் மற்றும் பஸ் தரிப்பு நிலையங்களின் பாதுகாப்பு வழமையை விடவும் பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன. தூர இடங்களுக்குப் பயணம் செய்வோர் மற்றும் தூர இடங்களிலிருந்து பிரதான நகரங்களுக்கு வருகை தருகின்றவர்கள் அருகில் இருக்கின்ற நபர்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான பொதிகள் குறித்து விழிப்பாக இருக்குமாறும் பாதுகாப்புத் தரப்பினர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். (ச-5)

## ஜே.வி.பி...

வரை பொலிஸார் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் அவர் நேற்றுக் காலை வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். இதனைத் தொடர்ந்தே இவரை பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். வாகனங்களை கடத்தியதுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இவர்மீது ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை காணாமல்போன 3 வாகனங்களை பத்தரமுல்ல பெலவத்தையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தலைமைக் காரியாலயத்திலிருந்து மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

## இலங்கை – சீனா – பாக்...

சீனாவிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதிக்கும் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்பிற்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

முன்னதாக சீன ஜனாதிபதியுடன் இரு தரப்பு உறவுகள் மற்றும் யுத்த முனைப்புகளுக்கான சீனாவின் உதவிகள் குறித்து மகிந்த ராஜபக்ஷ விரிவாக கலந்துரையாடியுள்ளார். இந்த நிலையில் தற்போது சீனாவிற்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை, மஹிந்தராஜபக்ஷசந்தித்துள்ளார்.

இந்தியாவிற்கு எதிரான பாரிய கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சிகள் சீனா தலைமையில் இடம்பெற்று வருவதாகவும் அதில் பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இந்தியாவின் அயல் நாடுகள் இடம்பெற்றுள்ளமை இந்தியாவிற்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இந்திய இராஜதந்திரிகளை மேற்கோள்காட்டி பாகிஸ்தான் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீன விஜயத்தின் போது பாகிஸ்தான் ஜனாதிபதி தமது அணுஆயுத பலத்தை அதிகரிப்பதற்கு சீனாவின் ஒத்துழைப்பைக் கோரவுள்ளதாகவும், இந்தியாவிற்கு எதிரான கூட்டணி நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கு யுத்த தளபாட உதவிகள் மற்றும் நெருக்கடி கால உதவிகளை வழங்குவது குறித்தும் சீனா மற்றும் பாகிஸ் தான் ஆகிய நாடுகள் கூட்டாக ஆராய்ந்து வருகின்றன.

அதன் ஒரு அம்சமாக மகிந்த ராஜபக்ச, பர்வேஸ் முஷாரப் மற்றும் சீன அரசாங்க பிரதிநிதிகள் கொண்ட முத்தரப்பு சந்திப்பிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## 30 ஆயிரம் ஏவுகணைகளைப்...

யாவின் மத்திய பிரதேசத்திலுள்ள குறுப்பினா என்ற நிறுவனம் இலங்கைக்கு பல்குழல் பீரங்கிகளுக்கு பயன்படுத்தும் 10 ஆயிரம் ஏவுகணைகளை விற்பனை செய்துள்ளது.

122 மில்லி மீற்றர் ரகத்தைச் சேர்ந்த இந்த ஏவுகணைகளானது 20 கிலோக்கிராம் வெடிபொருள்களைத் தாங்கி 30 கிலோமீற்றர் தூரம் செல்லக் கூடியது. ஏவுகணை ஒன்று 180 அமெரிக்க டொலர் வீதம் 18 இலட்சம் டொலர்கள் இந்த ஏவுகணைக் கொள்வனவுக்காக அரசாங்கம் செலவிட்டுள்ளது.

அத்தோடு இதே ரகத்தைச் சேர்ந்த மேலும் 30 ஆயிரம் ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் அரசாங்கம் ஸ்லோவோக்கிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மேற்படி ஏவுகணை விற்பனையானது எந்த வகையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆயுத ஏற்றுமதி விதிமுறைகளை மீறவில்லை என ஸ்லோவோக்கியா வலியுறுத்திக் கூறியுள்ளது.

அத்தோடு ஆயுத ஏற்றுமதி தொடர்பான ஐக்கிய நாடுகளின் விதிமுறைகளுக்கு அமைவாகவே, தாம் செயற்படுவதாக ஸ்லோவோக்கிய வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.